ஸ்ரீரஸ்து :

பேரருளாளன் பெருந்தேவித் தாயார் திருவடிகளே சரணம்.

ஆழ்வாரெம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீராமாநுஜ பக்தஹஸ்த பூஷணத்தில்

இராமாநுச நூற்றந்தாதி - பொழிப்புரையுடன்

1\. பூமன்னுமாது பொருந்திய மார்பன் * புகழ்மலிந்த
பாமன்னுமாற னடிபணிந் துய்ந்தவன் * பல்கலையோர்
தாம்மன்ன வந்த விராமானுசன் சரணாரவிந்தம்
நாம்மன்னிவாழ * நெஞ்சே சொல்லுவோமவன் நாமங்களே.

ஓ மனமே! தாமரைப்பூவில் பொருத்தமுடையளாயிருந்த பிராட்டி அப்பூவை விட்டு வந்து பொருந்துகைக் குறுப்பான போக்யதையை யுடைய திரு மார்பை யுடையனான பெருமானுடைய திருக்கல்யாண குணங்கள் நிறைந்த தமிழ்ப் பாசுரங்களிலே ஊற்றமுடையவரான நம்மாழ்வாருடையதிருவடிகளை ஆச்ர யித்து உஜ்ஜீவித்தவரும் பலபல சாஸ்த்ரங்களை ஓதின மஹான்கள் நிலைபெறும்படி (இவ்வுலகில்) வந்தவதரித்தவருமான எம்பெருமானாருடைய திருவடித்தாமரைகளை நாம் ஆச்ரயித்து வாழ்வதற்குறுப்பாக அவ்வெம்பெருமானாரது திருநாமங்களையே ஸங்கீர்த்தநம் பண்ணுவோம். ... ... *

2\. கள்ளார்பொழில் தென்னரங்கன் * கமலப்பதங்கள் நெஞ்சில்
கொள்ளாமனிசரை நீங்கி * குறையல் பிரானடிக்கீழ்
விள்ளாதவன்ப னிராமானுசன் மிக்க சீலமல்லால்
உள்ளாதென்னெஞ்சு * ஒன்றறியே னெனக்குற்ற பேரியல்வே.

தேன் நிறைந்த சோலைகளையுடைய தென் திருவரங்கத்திலே பள்ளி கொள்ளும் பெருமானுடைய தாமரை போன்ற திருவடிகளைத் தமது நெஞ்சிலே வையாத மனிதர்களை விட்டொழிந்து திருமங்கை மன்னனுடைய திருவடிகளிலே என்றும் விட்டு நீங்காத பக்தியையுடையரான எம்பெருமானாருடைய சிறந்த சீல குணத்தைத் தவிர வேறொன்றையும் எனது நெஞ்சானது நினைக்க மாட்டாது; (இவ்வாறாக) ஸித்தித்ததொரு சிறந்த ஸ்வபாவத்திற்கு ஒரு காரணத்தையும் அறிகின்றிலேன். ... ... *

3\. பேரியல்நெஞ்சே அடிபணிந்தே னுன்னை * பேய்ப்பிறவிப்
பூரியரோடுள்ள சுற்றம் புலர்த்தி * பொருவருஞ்சீர்
ஆரியன் செம்மை யிராமானுசமுனிக் கன்புசெய்யும்
சீரியபேறுடையார் * அடிக்கீ ழென்னைச் சேர்த்ததற்கே.

மிகவும் கம்பீரமான மனமே; உன்னை வணங்குகின்றேன்; (எதற்காக வென்னில்;) ஆஸுரப் பிறப்பையுடையவர்களான நீசர்களோடு (எனக்கு இருந்த உறவைப் போக்கடித்து ஒப்பற்ற குணங்களையுடையவரும் சிறந்த அநுஷ்டாந முடையவரும் (ஆச்ரிதரோடு) ருஜுவாகப் பரிமாறுந்தன்மை வாய்ந்தவருமான எம்பெருமானார் திறத்தில் பக்தி பண்ணுவதையே பரம புருஷார்த்தமாகவுடைய வர்களான கூரத்தாழ்வான்போல்வாருடைய திருவடிகளின் கீழே (பரம நீசனு

யிருந்த) என்னைக் கொண்டு சேர்த்த மஹோபகாரத்திற்காகவே (உன்னை அடி பணிந்தேன்.) ... ... *

4. என்னைப்புவியி லொருபொரு ளாக்கி * மருள்சுரந்த
முன்னைப்பழவினை வேரறுத்து * ஊழி முதல்வனையே
பன்னப்பணித்த விராமாநுசன் பரன் பாதமுமென்
சென்னித்தரிக்க வைத்தான் * எனக்கேதுஞ் சிதைவில்லையே.

காலம் முதலிய ஸகல பதார்த்தங்களுக்கும் காரண பூதனான எம்பெருமானையே (எல்லாரும் விவேகித்து அநுஸந்திக்கும்படி (ஸ்ரீபாஷ்யமுகத்தாலே) அருளிச்செய்த ஸர்வோத்க்ருஷ்டரான எம்பெருமானார் இந்தப்பூமியிலே (அபதார்த்தமாய்க் கிடந்த) என்னை ஒரு பதார்த்தமாக்கி அஜ்ஞான மூலகங்களாய் மிகவும் அநாதிகளான (எனது) பாவங்களை வேரற நீக்கித் தமது திருவடிகளையும் எனது தலையிலே நான் உகந்து தரிக்கும்படியாக வைத்தருளினார்; இவ்வளவு மஹாப்ரஸாதம் பெற்றேனான பின்பு) அடியேனுக்கு எவ்விதமான ஹாநியும் இனி உண்டாக வழியில்லை. ... ... *

5. எனக்குற்ற செல்வ மிராமாநுசனென்று * இசையகில்லா
மனக்குற்றமாந்தர் பழிக்கில்புகழ் * அவன் மன்னியசீர்
தனக்குற்றவன்பரவன் திருநாமங்கள் சாற்றும், என்பா
வினக்குற்றங் காணகில்லார் * பத்தியேய்ந்த வியல்விதென்றே.

'நமக்குப் ப்ராப்தமான ஸம்பத்து எம்பெருமானுரே' என்று அத்யவஸாயங் கொண்டிருக்க மாட்டாத துஷ்டஹ்ருதயர்களான மனிசர் (இந்நூலைப் பழிப்பர்களாகில் (அன்னவர்களுடைய பழிப்பே இதற்குப்) புகழாய்விடும்; அவ்வெம்பெருமானுடைய நித்யஸித்தமான கல்யாண குணங்களுக்குத் தகுதியான அன்பையுடையவர்களான மஹான்கள் இந்நூலானது பக்தியோடு கூடின ப்ரவ்ருத்தியை யுடையதென்று திருவுள்ளம்பற்றி அவ்விராமாநுசனுடைய திருநாமங்களைச் சொல்லுகின்ற என்னுடைய (இந்தப்) பாசுர மாலைகளிலுள்ள குற்றங்களைக் காணமாட்டார்கள். ... ... *

6. இயலும்பொருளு மிசையத் தொடுத்து * ஈன்கவிகளன்பால்
மயல்கொண்டு வாழ்த்து மிராமாநுசனை * மதியின்மையால்
பயிலும்கவிகளில் பத்தியில்லாத வென் பாவிநெஞ்சால்
முயல்கின்றனன் * அவன்றன் பெருங்கீர்த்தி மொழிந்திடவே.

விலக்ஷணரான கவிகள் ப்ரீதியினாலே சப்தமும் அர்த்தமும் நன்கு பொருந்தும்படியாகக் கவனம்பண்ணி வ்யாமோஹம் தலையெடுத்துத் துதிக்கும்படி நின்ற எம்பெருமானாரை வருணிக்கின்ற பாடல்களிலே பக்தியற்றதான என்னுடைய பாபிஷ்டமான நெஞ்சினாலே அவ்வெம்பெருமானாருடைய அளவற்ற கீர்த்திகளைப் பேசுவதாக புத்தியில்லாமையினாலே ப்ரவர்த்திக்கின்றேன். ... ... *

7. * மொழியைக்கடக்கும் பெரும்புகழான் * வஞ்சமுக் குறும்பாம்
குழியைக்கடக்கும் நம் கூரத்தாழ்வான் சரண்கூடியபின் *
பழியைக்கடத்து மிராமாநுசன் புகழ்பாடி அல்லா
வழியைக்கடத்தல் * எனக்கினி யாதும் வருத்தமன்றே.

வாய்கொண்டு வருணிக்க முடியாதபடி வாசாமகோசரமான பெரிய புகழையுடையவரும் கல்விச்செருக்கு, செல்வச்செருக்கு, குலச்செருக்கு என்னும்

மூவகைக் குறும்புகளாகிற படுகுழியைக் கடந்திருப்பவரும் நமக்கு நாதருமான கூரத்தாழ்வானுடைய திருவடிகளை நான் ஆச்ரயித்த பின்பு ஸர்வபாப நிவர்த்தகரான எம்பெருமானாருடைய நற்குணங்களைப்பாடி ஸ்வரூபத்திற்குச்சேராத தீய வழிகளைத் தப்பிப் பிழைக்கையானது அடியேனுக்கு இனிமேலுள்ள காலமெல்லாம் ஈஷத்தும் ப்ரயாஸ ஸாத்யமன்று; எளிதேயாம். ... ... *

8. வருத்தும் புறவிருள்மாற்ற * எம்பொய்கைப்பிரான் மறையின்
குருத்தின் பொருளையும் செந்தமிழ்தன்னையுங்கூட்டி * ஒன்றத்
திரித்தன் றெரித்த திருவிளக்கைத் தன்திருவுள்ளத்தே
யிருத்தும் பரமன் * இராமானுசனெம் மிறையவனே.

வருத்தத்தை யுண்டு பண்ணக்கூடிய பாஹ்ய விஷயங்களைப்பற்றின அஜ்ஞானமாகிற இருளைப் போக்குவதற்காக நமது குலத்தலைவரான பொய்கையாழ்வார் முற்காலத்தில் வேதாந்தங்களிற் பதிந்து கிடக்கும் பொருள்களையும் செந்தமிழ்ச் சொற்களையுங்கூட்டி இரண்டையும் ஒன்றுசேர ஒருதிரியாக்கி ஜ்வலிக்கச் செய்த(முதல் திருவந்தாதியாகிற)திருவிளக்கைத் தனது திருவுள்ளத்தே வைத்துக் கொண்டிரா நின்ற மஹாவைபவசாலியான எம்பெருமானார் நமக்கு ஸ்வாமி. ... *

9. இறைவனைக்காணு மிதயத் திருள்கெட * ஞானமென்னும்
நிறைவிளக்கேற்றிய பூதத்திருவடி தாள்கள் * நெஞ்சத்
துறையவைத்தாளு மிராமானுசன் புகழோதும் நல்லோர்
மறையினைக்காத்து * இந்தமண்ணகத்தே மன்ன வைப்பவரே.

ஸர்வஸ்வாமியான எம்பெருமானை ஸாக்ஷாத்கரிப்பதற்கு உபகரணமான ஹ்ருதயத்திலுள்ள அஜ்ஞானமாகிற அந்தகாரமானது நசிக்கும்படியாக ஞானமாகிற பூர்ண தீபத்தை ப்ரகாசிப்பித்தருளி இரண்டாந் திருவந்தாதியை அருளிச்செய்த பூதத்தாழ்வாருடைய திருவடிகளைத் தமது திருவுள்ளத்திலே சாச்வதமாக ஸ்தாபித்து (அவற்றையே) அநுபவிக்கின்ற எம்பெருமானாருடைய திவ்ய குணங்களை இடைவிடாது அநுஸந்திக்கின்ற விலக்ஷண புருஷர்கள்தாம் இப்பூமண்டலத்திலே வேதங்களை ரக்ஷித்து என்றைக்கும் அழிவில்லாதபடி ப்ரதிஷ்டாபனம் பண்ணவல்லவர்கள். ... ... *

10. மன்னிய பேரிருள் மாண்டபின் * கோவலுள் மாமலராள்
தன்னொடு மாயனைக் கண்டமை காட்டும் * தமிழ்த் தலைவன்
பொன்னடி போற்று மிராமானுசற் கன்பு பூண்டவர்தான்
சென்னியிற் சூடும் * திருவுடையா ரென்றுஞ் சீரியரே.

ஒருவராலும் போக்க முடியாதபடி நிலைத்து நின்ற (அஜ்ஞானமாகிற பெருத்த இருளானது முற்பட்ட ஆழ்வார்களிருவரும் ஏற்றின திருவிளக்காலே) நன்றாக நீங்கின பின்பு, திருக்கோவலூரில் ஆயனாரைப் பிராட்டியோடுகூட தாம் ஸேவித்தபடியை ("திருக்கண்டேன்" இத்யாதி ப்ரபந்த முகத்தாலே) வெளியிட்டருளின தமிழ்க்குத் தலைவரான பேயாழ்வாருடைய அழகிய திருவடிகளைப் புகழுமவரான எம்பெருமானார் திறத்தில் பக்தியையுடையவர்களினது திருவடிகளை சிரோ பூஷணமாகக் கொள்ளுஞ் செல்வமுடையோர்தாம் என்றைக்கும் ஸ்ரீமான்கள்.

11. சீரியநான்மறைச் செம்பொருள் * செந்தமிழா லளித்த
பாரியலும்புகழ்ப் பாண்பெருமாள் * சரணம் பதுமத்
தாரியல்சென்னி யிராமானுசன் தன்னைச் சார்ந்தவர்தம்
காரியவண்மை * என்னால் சொல்லொணுதிக் கடலிடத்தே.

சிறந்த நால்வேதங்களிலுள்ள செவ்விய பொருள்களை அழகிய தமிழ்ப் பாசுரங்களினால் அருளிச்செய்தவரும் பூமியெங்கும் பொருந்திய புகழையுடையவரு மான திருப்பாணாழ்வாருடைய திருவடிகளாகிற தாமரைப் பூவாலே அலங்கரிக்கப் பட்ட திருமுடியையுடையரான எம்பெருமானாரை ஆச்ரயமாகப் பற்றினவர் களுடைய அநுஷ்டாந வைலக்ஷண்யமானது கடல் சூழ்ந்த இப்பூமியில் (இப்படிப் பட்ட வைபவமுடையதென்று) என்னால் சொல்லித் தலைக்கட்ட முடியாதது.

12. இடங்கொண்ட கீர்த்தி மழிசைக்கிறைவன் * இணையடிப்போ
தடங்குமிதயத் திராமாநுசன் * அம்பொற்பாத மென்றுங்
கடங்கொண் டிறைஞ்சும் திருமுனிவர்க்கன்றிக் காதல்செய்யாத்
திடங்கொண்ட ஞானியர்க்கே * அடியேனன்பு செய்வதுவே.

பூமியெங்கும் வியாபித்த கீர்த்தியையுடையரான திருமழிசைப்பிரானு டைய உபயபாதாரவிந்தங்கள் குடிகொண்டிருக்கப்பெற்ற திருவுள்ளத்தையுடைய ரான எம்பெருமானாருடைய மிகவும் அழகிய திருவடிகளை எக்காலத்திலும் இதுவே நமக்கு ஸ்வரூபமென்கிற புத்தியோடே ஆச்ரயிக்கையாகிற செல்வத்தையுடைய ரான மஹான்களுக்குத் தவிர மற்றவர்களுக்கு அன்பு பூண்டிராத மிக்க உறுதி யுடையரான ஞானிகளுக்குத்தான் அடியேன் பக்தனாயிருப்பேன். ... *

13. செய்யும் பசுந்துளவத் தொழின்மாலையும் * செந்தமிழிற்
பெய்யும் மறைத்தமிழ்மாலையும் * பேராத சீரரங்கத்
தையன் கழற்கணியும் பரன்தாளன்றி ஆதரியா
மெய்யன் * இராமாநுசன் சரணேகதி வேறெனக்கே.

(தொண்டரடிப்பொடியாழ்வாராகிற தம்மாலே) செய்யப்பட்டதாய் பசுமை தங்கிய திருத்துழாய் மயமாய் வேலைப்பாடுகளையுடைத்தான பூமாலைகளையும் அழகிய தமிழ்ப்பாஷையிலே உண்டாக்கப்பட்டதாய் வேதஸத்ருசமான திருமாலை திருப்பள்ளியெழுச்சியென்கிற திவ்யப்ரபந்தங்களாகிற சொல்மாலைகளையும் நித்ய ஸித்தமான கல்யாண குணங்களையுடையரான ஸ்ரீரங்கநாதனுடைய திருவடி களிலே சாத்தினவரான தொண்டரடிப்பொடியாழ்வாராகிற பெரியவருடைய திருவடிகளைத் தவிர மற்றொன்றையும் விரும்பாத ஸத்யசீலரான எம்பெருமானா ருடைய திருவடிகளே அடியேனுக்கு விலக்ஷணமான ப்ராப்ய வஸ்துவாம். ... *

14. கதிக்குப்பதறி * வெங்கானமுங் கல்லுங் கடலுமெல்லாம்
கொதிக்கத் தவஞ்செய்யுங் கொள்கையற்றேன் * கொல்லிகாவலன்சொல்
பதிக்குங்கலைக் கவிபாடும் பெரியவர் பாதங்களே
துதிக்கும்பரமன் * இராமாநுச னென்னைச் சோர்விலனே.

குலசேகரப் பெருமாளாலே அருளிச்செய்யப்பட்டதாய் சாஸ்திரச் சொற் கள் அமையப்பெற்றதான பெருமாள் திருமொழிப்பாசுரங்களைப் பாடுகின்ற பெரி யோர்களது திருவடிகளையே ஸ்தோத்ரம் செய்பவராய் உத்க்ருஷ்டரான எம்பெரு மானார் என்னை விட்டு நீங்குகிறாரில்லை; (ஆதலால்) ப்ராப்ய லாபத்துக்காக விரைந்து அத்யுஷ்ணமான காடுகளிலும் மலைகளிலும் கடல்களிலும் நின்று கொண்டு எல்லா அவயவங்களும் கொதிக்கும்படியாகத் தபஸ்ஸு பண்ணும் ஸ்வபாவத்தை விட்டொழித்தேன். ... ... *

15. சோராதகாதல் பெருஞ்சுழிப்பால் * தொல்லைமாலை யொன்றும்
பாராதவனைப் பல்லாண்டென்று காப்பிடும் * பான்மையன்தாள்
பேராத வுள்ளத் திராமாநுசன்றன் பிறங்கியசீர்
சாரமனிசரைச் சேரேன் * எனக்கென்ன தாழ்வினியே!

ஒருநாளும் குறைவுபடாத ப்ரேமத்தில் பெருஞ்சுழிப்படுகையாலே நித்யனை எம்பெருமான் படியைச் சிறிதும் நிரூபியாமல் அவ்வெம்பெருமானை நோக்கி பல்லாண்டு பல்லாண்டென்று மங்களாசாஸநம் பண்ணுகையையே நித்ய ஸ்வபாவமாகவுடையரான பெரியாழ்வாருடைய திருவடிகள் விட்டகலாத திருவுள்ளத்தை யுடையரான எம்பெருமானாருடைய மிக்க திருக்குணங்களை தங்களுக்கு அநுபாவ்யமாகக்கொள்ளாத மநுஷ்யர்களைப் பற்றமாட்டேன் ;இப்படிப்பட்ட உறுதி பிறந்த பின்பு அடியேனுக்கு என்னகுறை? ... ... *

16. தாழ்வொன்றில்லா மறைதாழ்ந்து * தலமுழுதுங் கலியே
ஆள்கின்றநாள் வந்தளித்தவன் காண்மின் * அரங்கர்மௌலி
சூழ்கின்ற மாலையைச் சூடிக்கொடுத்தவள் தொல்லருளால்
வாழ்கின்றவள்ளல் * இராமாநுச னென்னும் மாமுனியே.

ஸ்ரீரங்கநாதனுடைய திருமுடியிலே சாத்தக்கடவதான பூமாலையைத் தனது திருக்குழலிலே அணிந்து வாஸிதமாக்கிக் கொடுத்தவளான ஆண்டாளுடைய அவ்யாஜமான அருளாலே வாழ்பவரும் உதாரருமான ஸ்ரீராமாநுஜ முனியானவர் (எப்படிப்பட்டவரென்றால்) ஒரு குறையுமில்லாதிருந்த வேதமானது (குத்ருஷ்டிகளாலே) இழிவுபெற பூமியெங்கும் கலியே ஸாம்ராஜ்யம் பண்ணுகிற காலத்திலே இங்கே வந்தவதரித்து (அந்த வேதத்தை உத்தரிப்பித்து உலகத்தை) ரக்ஷித்தருளினவர். ... ... *

17. முனியார்துயரங்கள் முந்திலும் * இன்பங்கள் மொய்த்திடினுங்
கனியார்மனம் கண்ணமங்கை நின்றானை * கலைபரவும்
தனியானையைத் தண்டமிழ்செய்த நீலன்றனக் குலகி
லினியானை * எங்க ளிராமாநுசனை வந்தெய்தினரே.

ஸகல சாஸ்த்ரங்களாலும் துதிக்கப்படுகிற அத்விதீயமான மத்தகஜம் போன்ற திருக்கண்ண மங்கையிலே நிற்கும் பத்தராவிப் பெருமாளைக் குறித்து இவ்வுலகில் ஸம்ஸார தாபஹரமான திவ்யப்ரபந்தத்தைச் செய்தருளின திருமங்கையாழ்வார் பக்கல் ப்ரேமமுடையவராய் எங்களுக்குத் தலைவரான எம்பெருமானாரை வந்து பணிந்த மஹான்கள் தாபத்ரயம் செறிந்தாலும் வருத்தப் படமாட்டார்கள் ; ஸுகங்கள் செறிந்தாலும் களிப்படையமாட்டார்கள். ... *

18. எய்தற்கரிய மறைகளை * ஆயிர மின்தமிழாற்
செய்தற்குலகில் வருஞ் சடகோபனை * சிந்தையுள்ளே
பெய்தற்கிசையும் பெரியவர் சீரை யுயிர்களெல்லாம்
உய்தற் குதவும் * இராமாநுசனெம் உறுதுணையே.

அதிகரிக்க முடியாத (அளவற்ற) வேதங்களை இனிய தமிழாகிய ஆயிரம் பாசுரங்களினால் அருளிச்செய்வதற்காக இவ்வுலகில் வந்துதித்த நம்மாழ்வாரை தமது ஹ்ருதயத்தினுள்ளே த்யானிப்பதற்கு இணங்கின ஸ்ரீமதுரகவிகளுடைய ஜ்ஞாநாதி குணங்களை ஸகலாத்மாக்களும் உஜ்ஜீவிக்குமாறு உபகரித்தருளா நிற்கிற எம்பெருமானார் எமக்கு உற்றதுணை. ... ... *

19. உறுபெருஞ் செல்வமுந் தந்தையுந் தாயும் * உயர்குருவும்
வெறிதருபூமகள் நாதனும் * மாறன் விளங்கியசீர்
நெறிதருஞ் செந்தமிழாரணமே யென்றிந் நீணிலத்தோர்
அறிதரநின்ற * இராமாநுச னெனக் காரமுதே.

சிறந்த பெரிய ஸம்பத்தும் மாதா பிதாக்களும் ஸதாசார்யனும் மணம் மிக்க பூவைப் பிறப்பிடமாகவுடைய பெரிய பிராட்டியாருக்குக்கொழுநனை ஸர்வேச்வரனும (ஆகிய எல்லாம்) நம்மாழ்வார் (தமக்கு) ப்ரகாசித்த பகவத் குணங்களின் அடைவே அருளிச்செய்த செந்தமிழ் வேதமேயென்று இப்பெரிய உலகிலுள்ளார் யாவரும் அறியும்படி நின்ற எம்பெருமானுர் அடியேனுக்கு பரமபோக்யர். ... *

20. ஆரப்பொழில் தென்குருகைப்பிரான் * அமுதத் திருவாய்
ஈரத்தமிழி னிசையுணர்ந்தோர்கட்கு * இனியவர்தஞ்
சீரைப்பயின்றுய்யுஞ் சீலங்கொள் நாதமுனியை நெஞ்சால்
வாரிப்பருகும் * இராமாநுசனென்றன் மாநிதியே.

சந்தனச் சோலைகளையுடைய அழகிய திருக்குருகூரிலே (அவதரித்த) மஹோபகாரமான ஆழ்வாருடைய பரமபோக்யமான திருப்பவளத்தில் பிறந்த ஈரச் சொல்லாகிய திருவாய்மொழியின் இசையை அறிந்தவர்களுக்கு இஷ்டர்களாயிருப்பவர்களுடைய குணங்களை அப்யஸித்து ஸத்வைத பெறும் சீலத்தையுடையரான நாதமுனிகளைத் தம் திருவுள்ளத்தாலே அபிநிவேசத்தோடு அனுபவிக்கின்ற எம்பெருமானுர் எனக்கு அக்ஷயமான நிதி. ... ... *

21. நிதியைப்பொழியும் முகிலென்று * நீசர்தம் வாசல்பற்றித்
துதிகற்றுலகிற் றுவள்கின்றிலே னினி * தூய்நெறிசேர்
எதிகட்கிறைவன் யமுனைத் துறைவ னிணையடியாம்
கதிபெற்றுடைய * இராமாநுச னென்னைக் காத்தனனே.

பரிசுத்தமான அனுட்டானமுடைய யதிகளுக்கு தலைவரான ஆளவந்தாருடைய உபய பாதங்களாகிற ப்ராப்யத்தை பெற்று (அதனாலே) உலகத்தார்க்கெல்லாம் ஸ்வாமியாயிருக்கிற எம்பெருமானுர் என்னை ரக்ஷித்தருளினுர்; (ஆன பின்பு இனிமேல், "நிதிகளை வர்ஷிக்கிற மேகமே!" என்று ஸ்தோத்திரங்களைப் பண்ணிக்கொண்டு இவ்வுலகத்தில் நீசராயிருப்பவருடைய வாசலைப் பற்றி நின்று வருந்தமாட்டேன். ... ... *

22. கார்த்திகையானுங் கரிமுகத்தானும் * கனலும் முக்கண்
மூர்த்தியும் மோடியும் வெப்பும் முதுகிட்டு * மூவுலகும்
பூத்தவனேயென்று போற்றிட வாணன் பிழைபொறுத்த
தீர்த்தனையேத்தும் * இராமாநுச னென்றன் சேமவைப்பே.

ஸுப்ரஹ்மண்யனும் கணபதியும் (அவர்களுக்குத் துணையாய் வந்த) அக்நியும் சிவனும் துர்க்கையும் ஜ்வரதேவதையும் முதுகுகாட்டி ஓடிப்போன பின்பு (அநந்யகதியான பாணஸுரனனவன்) "மூன்று உலகங்களையும் திருநாபிக் கமலத்திலே உண்டாக்கின பெருமானே!" (என்னைக் காத்தருள்) என்று போற்ற (அந்த) பாணஸுரனுடைய அபராதத்தை க்ஷமித்தருளின பாவநனை ஸர்வேச்வரனை நித்யம் துதிக்கின்ற எம்பெருமானுர் எனக்கு ஆபத்தநம்.

23. வைப்பாய வான்பொருளென்று * நல்லன்பர் மனத்தகத்தே
எப்போதும் வைக்கு மிராமாநுசனை * இருநிலத்தில்
ஒப்பாரிலாத வுறுவினையேன் வஞ்ச நெஞ்சில் வைத்து
முப்போதும் வாழ்த்துவன் * என்னுமிதுவவன் மொய்புகழ்க்கே?

விலக்ஷண பக்தியுடையவர்கள் "எம்பெருமானுர்தாம் நமக்கு ஆபத் ரக்ஷகமான அக்ஷயதநம்" என்று கொண்டு தங்கள் ஹ்ருதயத்திலே எப்போதும்

த்யாநிப்பதற்கு விஷயமான எம்பெருமானாரை இந்தப் பெரிய வுலகத்திலே ஒப்பற்ற மஹாபாபியான அடியேன் (என்னுடைய) க்ருத்ரிமமான நெஞ்சிலே வைத்து ஸர்வகாலமும் ஏத்தா நின்றேன்; மிகப் பெரிய அவரை நீசனாகிய நான் வாழ்த்துகையாகிற இது அவ்வெம்பெருமானாருடைய சிறந்த கீர்த்திக்கு என்னாகுமோ? [அவத்யமாமோ?] ... ... *

24. மொய்த்தவெந் தீவினையால் பல்லுடல்தொறும் மூத்து * அதனால்
எய்த்தொழிந்தேன் முனநாள்களெல்லாம் * இன்று கண்டுயர்ந்தேன்
பொய்த்தவம் போற்றும் புலைச்சமயங்கள் நிலத்தவியக்
கைத்தமெய்ஞ்ஞானத்து * இராமாநுச னென்னும் கார்தன்னையே.

கீழ்க்கழிந்த அநாதிகாலமெல்லாம் பலபல சரீரங்கள் தோறும் ஆத்மாவை மொய்த்துக் கொண்டிருக்கிற அதிக்ரூரமான கர்மத்தாலே கிழத்தனம் வருமளவும் வாஸஞ்செய்து அத்தாலே மிக்க பரிதாபமடைந்தேன்; கபடமான அனுஷ்டானங்களை நடத்திப் போருகிற நீச மதஸ்தர்கள் இந்நிலவுலகத்திலே வேரற்றொழியும்படி நிரஸித்தருளின உண்மை ஞானமுடையரான எம்பெருமானாகிற காளமேகத்தை இன்று அடியேன் ஸேவிக்கப் பெற்று சிறந்தவனானேன். ... ... *

25. காரேய் கருணை யிராமாநுச * இக்கடலிடத்தில்
ஆரே யறிபவர் நின்னருளின்தன்மை * அல்லலுக்கு
நேரேயுறைவிடம் நான் நீயென்னை யுற்றபினுன்
சீரேயுயிர்க்குயிராய் * அடியேற்கின்று தித்திக்குமே.

மேகத்தையொத்த கருணையையுடைய எம்பெருமானாரே! அடியேன் துக்கங்களுக்கு நேரே வாஸஸ்தானமாயிருப்பவன்; இப்படிப்பட்ட அடியேனை தேவரீர் தாமாகவே ஸ்வீகரித்தருளின பின்பு தேவரீருடைய கல்யாண குணங்களே ஆத்மாவுக்குத் தாரகமாய் அடியேனுக்கு இன்று ரஸியா நின்றது; தேவரீருடைய க்ருபையின் ஸ்வபாவத்தை கடல் சூழ்ந்த இப்பூமண்டலத்தில் அறியக் கூடியவர்கள் ஆருளர்? ஆருமில்லை. ... ...

26. திக்குற்றகீர்த்தி யிராமாநுசனை * என்செய்வினையாம்
மெய்க்குற்றம்நீக்கி விளங்கிய மேகத்தை * மேவும் நல்லோர்
எக்குற்றவாள ரெதுபிறப் பேதியல்வாக நின்றோர்
அக்குற்ற மப்பிறப்பு * அவ்வியல்வே நம்மையாட்கொள்ளுமே.

என்னாலே செய்யப்பட்ட வினையாகிற நிலைநின்ற தோஷங்களைப் போக்கி (இவனுடைய தோஷங்களைப் போக்கப் பெற்றோமென்னும் மகிழ்ச்சியாலே உஜ்வலரான பரம உதாரராய் திசைகள் தோறும் விரிந்த புகழை யுடையரான எம்பெருமானாரை பொருந்தியிருக்கின்ற விலக்ஷணர்கள் யாதொரு குற்றத்தையுடையராகவும் யாதொரு ஜன்மத்தை யுடையராகவும் யாதொரு சரிதையை யுடையராகவும் முன்பு நின்றார்களோ, அந்தக் குற்றமும் அந்த ஜன்மமும் அந்த சரிதையுமே நம்மை அடிமைப்படுத்திக் கொள்ளவற்று. ... ... *

27. கொள்ளக் குறைவற்றிலங்கி * கொழுந்துவிட் டோங்கியவுன்
வள்ளற்றனத்தினால் வல்வினையேன் மனம் நீபுகுந்தாய் *
வெள்ளைச் சுடர்விடுமுன் பெருமேன்மைக் கிழுக்கிதென்று
தள்ளுற்றிரங்கும் * இராமாநுசவென் தனி நெஞ்சமே.

எம்பெருமானாரே !, கொள்ளக் கொள்ளக் குறையாமல் தானே விளங்கி மேன்மேலும் இளகிப் பதித்து வளர்ந்திருப்பதான தேவரீருடைய ஔதார்ய குணத்தாலே மஹா பாபியான எனது நெஞ்சிலே (தேவரீருடைய பெருமை பாராதே) வந்து புகுந்தருளிற்று ; (வஸிஷ்டன் சண்டாள க்ருஹத்தில் புகுந்தாற்போலே) புகுந்தவிது. பரிசுத்தமாய் விளங்கா நின்றுள்ள தேவரீருடைய ப்ரபாவத்திற்கு அவத்யாவஹம் என்று எனது துணையற்ற நெஞ்சானது தளர்ந்து ஈடுபடா நின்றது.

28. நெஞ்சில்கறைகொண்ட கஞ்சனைக் காய்ந்தநிமலன் * நங்கள்
பஞ்சித்திருவடிப் பின்னைதன் காதலன் * பாதம்நண்ணா
வஞ்சர்க்கரிய விராமாநுசன் புகழன்றி யென்வாய்
கொஞ்சிப் பரவகில்லாது * என்னவாழ்வின்று கூடியதே.

நெஞ்சிலே கல்மஷத்தையுடையனாயிருந்த கம்ஸனை முடித்த ஹேய ப்ரத்யநீகனாய், ஆச்ரிதர் பக்கல் அபிமாநமுடையளாய் பஞ்சுபோல் மெல்லிய திருவடிகளை யுடையளான நப்பின்னைப் பிராட்டிக்கு வல்லபனான கண்ணபிரானுடைய திருவடிகளை ஆச்ரயியாத ஆத்மாபஹாரக் கள்வர்களுக்கு துர்லபரான எம்பெருமானாருடைய குணங்களை யொழிய (மற்றொன்றை) என் வாக்கானது குலாவி ஏத்தமாட்டாது ; இன்று (எனக்கு) நேர்ந்த வாழ்ச்சியானது ஆச்சரியமானது. ... ... *

29. கூட்டும் விதியென்று கூடுங்கொலோ ?* தென்குருகைப்பிரான்
பாட்டென்னும் வேதப்பசுந்தமிழ் தன்னைத் * தன்பத்தியென்னும்
வீட்டின்கண்வைத்த விராமாநுசன்புகழ் மெய்யுணர்ந்தோ
ரீட்டங்கள்தன்னை * என்னாட்டங்கள் கண்டின்ப மெய்திடவே.

நம்மாழ்வாருடைய பாசுரங்கள் என்று ப்ரஸித்தமாய் வேதரூபமாய் செந்தமிழாயிருக்கிற திருவாய்மொழியை தம்முடைய பக்தியாகிற மாளிகையிலே ஸ்தாபித்தருளிய எம்பெருமானாருடைய கல்யாண குணங்களை உள்ளபடி அறிந்திருக்குமவர்களுடைய கோஷ்டிகளை என் கண்களானவை ஸேவித்து ஸுகிக்கும்படியாக அமைக்கவல்ல (அவருடைய) க்ருபையானது என்றைக்கு வாய்க்குமோ?

30. இன்பந்தரு பெருவீடுவந் தெய்திலென் ? * எண்ணிறந்த
துன்பந்தரு நிரயம்பல சூழிலென் ? * தொல்லுலகில்
மன்பல்லுயிர்கட் கிறையவன் மாயனென மொழிந்த
அன்பனனகன் * இராமாநுச னென்னை யாண்டனனே.

'அநாதியான இவ்வுலகத்தில் நித்யரான எல்லா ஆத்மாக்களுக்கும் சேஷியானவன் விஷ்ணுவே, என்று (ஸ்ரீபாஷ்ய முகத்தாலே) அருளிச்செய்த பரமகாருணிகராய் நிர்த்தோஷரான எம்பெருமானார் என்னை அடிமைகொண்டருளினார் ; (ஆன பின்பு) ஆநந்தாவஹமான மோக்ஷம் வந்து ஸித்தித்தாலென்ன ? அளவற்ற துக்கங்களைக் தருகிற பல நரகங்கள் வந்து சூழ்ந்து கொண்டால்தான் என்ன ? ... ... *

31. ஆண்டுகள்நாள் திங்களாய் * நிகழ்காலமெல்லாம் மனமே !
ஈண்டுபல்யோனிகள் தோறுழல்வோம் * இன்றோ ரெண்ணின்றியே
காண்டகு தோளண்ணல் தென்னத்தியூரர் கழலிணைக்கீழ்ப்
பூண்ட வன்பாளன் * இராமாநுசனைப் பொருந்தினமே.

நெஞ்சமே !, நாள்களாகவும் மாதங்களாகவும் வருஷங்களாகவும் (இப்படி) நடந்து செல்லுகிற ஸர்வ காலங்களிலும் திரண்டு பலவகைப்பட்ட யோனிகள் தோறும் தட்டித் திரிந்த நாம், இன்று ஒரு நினைவு மில்லாதிருக்கச் செய்தே (அகஸ்மாத்தாக) கண்ணாரக் காணத்தக்க தோள்களையுடைய ஸ்வாமியான பேரருளாளனுடைய திருவடிகளில் அன்பு பூண்ட எம்பெருமானாரைச் சேரப் பெற்றோம். (என்ன பாக்கியம் !) ... ... *

32. பொருந்தியதேசும் பொறையுந்திறலும் புகழும் * நல்ல
திருந்தியஞானமுஞ் செல்வமுஞ் சேரும் * செறுகலியால்
வருந்திய ஞாலத்தை வண்மையினால் வந்தெடுத்தளித்த
அருந்தவன் * எங்க ளிராமாநுசனை யடைபவர்க்கே.

தருமநெறியைத் திரஸ்கரிக்கின்ற கலியினாலே துக்கப்பட்ட பூமியை தமது நிர்ஹேதுக க்ருபையாலே வந்து உத்தரித்து ரக்ஷித்தவரும் சரணாகதியென்கிற அரிய தபஸ்ஸை அநுஷ்டித்தவரும் எமக்கு ஸ்வாமியுமான எம்பெருமானாரை ஆச்ரயிக்குமவர்களுக்கு ஸ்வரூபாநுரூபமான தேஜஸ்ஸும் க்ஷமாகுணமும் ஜிதேந்த்ரியத்வமாகிற பலமும் கீர்த்தியும் பரம விலக்ஷணமான அறிவும் பக்தியாகிற ஸம்பத்தும் தானே வந்துசேரும். ... ... *

33. அடையார்கமலத் தலர்மகள் கேள்வன் * கையாழியென்னும்
படையோடு நாந்தகமும் படர்தண்டும் * ஒண்சார்ங்கவில்லும்
புடையார் புரிசங்கமு மிந்தப்பூதலம் காப்பதற்கென்று *
இடையே யிராமாநுச முனியாயின விந்நிலத்தே.

தளங்கள் நெருங்கிய தாமரைப் பூவிற் பிறந்த பெரிய பிராட்டியார்க்கு வல்லபனான எம்பெருமானுடைய திருக்கையிலே (விளங்கா நின்ற) திருவாழியென்கிற திவ்யாயுதத்தோடே நாந்தகவாளும் ரக்ஷணத்தொழிலிலே பரந்திரா நின்ற கதையும் அழகிய ஸ்ரீசார்ங்கமென்கிற வில்லும் 'ஒரு பக்கத்துக்குத் தானே ஆபரணமாய்ப் போரும்படியான அழகிய ஸ்ரீபாஞ்சஜந்யமும் (ஆக இப்பஞ்சாயுதாழ்வார்கள்) இந்தப் பூமியை ரக்ஷிக்கைக்காக இப்பூமண்டலத்திலே எம்பெருமானார் பக்கலிலே ஆயினர். ... ... *

34. நிலத்தைச் செறுத்துண்ணும் நீசக்கலியை * நினைப்பரிய
பெலத்தைச் செறுத்தும் பிறங்கியதில்லை * என்பெய்வினைதென்
புலத்தில் பொறித்த வப்புத்தகச்சும்மை பொறுக்கியபின்
நலத்தைப் பொறுத்தது * இராமாநுசன்தன் நயப்புகழே.

எம்பெருமானாருடைய கல்யாண குணங்களானவை பூலோகத்தை ஹிம்ஸித்துத் தின்கிற நீசனான கலிபுருஷனுடைய இவ்வளவென்று நினைக்க முடியாதபடி அளவற்றதான பராக்ரமத்தைத் தொலைத்தவளவிலும் பிரகாசிக்கவில்லை ; (பின்னை எப்போது பிரகாசித்தன ? என்னில் :) என்னாலே செய்யப்பட்ட பாவங்களை யமலோகத்திலே எழுதிவைத்த அந்தப் புஸ்தகக் கட்டுகளை கொளுத்திவிட்ட பின்பு விளக்கம் பெற்றன. ... ... *

35. நயவேனொருதெய்வம் நானிலத்தே * சிலமானிடத்தைப்
புயலே யெனக்கவி போற்றிசெய்யேன் * பொன்னரங்கமென்னில்
மயலேபெருகு மிராமாநுசன் மன்னு மாமலர்த்தா
ளயரேன் * அருவினையென்னை யெவ்வாறின் றடர்ப்பதுவே.

வேறொரு தெய்வத்தை விரும்பமாட்டேன் ; இவ்வுலகில் சில நீச மனிதர்களைக் குறித்து 'மேகம்போலே வர்ஷிக்கிற உதாரனே!' என்று (அதிவாதமாகச்) சொல்லி கவிகள் கட்டி ஸ்தோத்ரம் செய்யமாட்டேன் ; 'திருவரங்கம்' என்று சொன்னவாறே அளவற்ற வ்யாமோஹத்தை யடைகின்ற எம்பெருமானாருடைய பொருந்திய சிறந்த திருவடித் தாமரைகளை மறக்கமாட்டேன் ; (ஆனபின்பு) கொடிய பாவங்கள் என்னை இன்று முதலாக எப்படி ஆக்ரமிக்கக்கூடும்? ... *

36. அடல்கொண்ட நேமிய னாருயிர்நாதன் * அன்றாரணச்சொற்
கடல்கொண்ட வொண்பொருள் கண்டளிப்ப * பின்னுங் காசினியோர்
இடரின்கண் வீழ்ந்திடத்தானு மவ்வொண்பொருள் கொண்டவர்பின்
படருங்குணன் * எம்மிராமாநுசன் படியிதுவே.

(ஆச்ரித விரோதிகளை அழிக்கவல்ல) மிடுக்கையுடைய திருவாழியை ஏந்தினவனாய் ஸகல ஆத்மாக்களுக்கும் சேஷியான எம்பெருமான் அர்ஜுநனுக்கு ஸாரதியாயிருந்த அக்காலத்தில் வேதங்களாகிற கடலில் மறைந்து கிடந்த நல்ல அர்த்தங்களை ஆராய்ந்து கீதாமூலமாக) உபதேசிக்க அதற்குப் பின்பும் பூமியிலுள்ளவர்கள் ஸம்ஸார துக்கத்தில் அழுந்திக்கிடக்க (எம்பெருமானாகிற தாமும்) (முன்பு ஸர்வேச்வரனருளிச்செய்த) அந்தச் சிறந்த அர்த்தங்களைக்கொண்டு அந்த ஸம்ஸாரிகளைப் பின்தொடரும் சீலமுடையர் ; அஸ்மத் ஸ்வாமியான எம்பெருமானாருடைய ஸ்வபாவம் இது. ... ... *

37. படிகொண்ட கீர்த்தி யிராமாயணமென்னும் பத்திவெள்ளம் *
குடிகொண்ட கோயிலிராமாநுசன் குணங்கூறும் * அன்பர்
கடிகொண்ட மாமலர்த்தாள் கலந்துள்ளங் கனியும்நல்லோ
ரடிகொண்டு கொண்டுகந்து * என்னையு மாளவர்க்காக்கினரே.

உலகமெங்கும் பரந்த புகழையுடைத்தான ஸ்ரீராமாயணமென்கிற பக்தி ஸமுத்திரம் நித்யவாஸம் பண்ணுகிற திவ்ய ஸ்தாநமாயிருக்கிற எம்பெருமானாருடைய திருக்குணங்களைப் பேசுகின்ற பக்திமான்களுடைய மணமிக்குச்சிறந்த பாதாரவிந்தங்களில் நெஞ்சு பொருந்தி ஸ்நேஹித்திருக்கிற மஹாநுபாவர்கள் (இவ்வாத்ம வஸ்துவானது உடையவர்க்கு சேஷப்பட்டதென்கிற) மூலப்பொருளைத் தெரிந்து கொண்டு ஆதரித்து அடியேனையும் அவ்வெம்பெருமானார்க்கு ஆட்படுத்தினார்கள். ... ... *

38. ஆக்கியடிமை நிலைப்பித்தனை யென்னையின்று * அவமே
போக்கிப் புறத்திட்ட தென்பொருளாமுன்பு ?* புண்ணியர்தம்
வாக்கிற்பிரியா விராமாநுச நின்னருளின் வண்ணம்
நோக்கிற் றெரிவரிதால் * உரையாயிந்த நுண்பொருளே.

(ஸ்வாமிந்!) (நெடுநாளாக அஹங்காரியாய்க்கிடந்த) என்னை இன்றைத் தினத்தில் ஒரு பொருளாக்கி சேஷத்வத்தில் நிலை நிறுத்தினீர் ; இன்று இப்படி செய்தருளின தேவரீர்) முற்காலமெல்லாம் வீணுகப்போக்கி வெளிவிஷயங்களிலே தள்ளி விட்டு வைத்தது என்ன நிமித்தமாக? (தேவரீரை இடைவிடாது அநுபவிக்கும்) பாக்கியசாலிகளுடைய வாக்கை விட்டுப்பிரியாத எம்பெருமானாரே! தேவரீருடைய திருவருளிருக்கும் பரிசு நோக்குமளவில் அறிய முடியாததாயிரா நின்றது ; இந்த ஸூக்ஷ்மமான விஷயத்தை தேவரீரே அருளிச்செய்யவேணும்

39. பொருளும் புதல்வரும் பூமியும் * பூங்குழலாருமென்றே
மருள்கொண் டிளைக்கும் நமக்கு நெஞ்சே !* மற்றுளார்தரமோ ?
இருள்கொண்ட வெந்துயர்மாற்றித் தன்னீறில் பெருப்புகழே
தெருளுந் தெருள்தந்து * இராமாநுசன் செய்யும் சேமங்களே.

த்ரவ்யம் என்று சொல்லிக்கொண்டும் புத்திரர்கள் என்று சொல்லிக் கொண்டும் க்ஷேத்ரமென்று சொல்லிக்கொண்டும் அழகிய குழலையுடைய ஸ்திரீகள் என்று சொல்லிக்கொண்டும் (அர்த்த புத்திராதிகளையே விரும்பி) அறிவு கெட்டு வருந்திக் கொண்டு கிடக்கிற நமக்கு அஜ்ஞாநத்தோடு கூடிய க்ரூரமான துக்கங்களை போக்கடித்து தம்முடைய முடிவில்லாத சிறந்த கல்யாண குணங்களையே சிந்திக்கக் கடவதான ஞானத்தை அளித்தருளி எம்பெருமானுர் செய்கிற க்ஷேமங்களானவை ஓ மனமே! மற்ற பேர்களுக்குச் செய்கிற மாதிரியோ ? [அல்ல ; விலக்ஷணம் என்றபடி] ... ... *

40. சேமநல்வீடும் பொருளுந் தருமமும் * சீரியநற்
காமமுமென்றிவை நாள்கென்பர் * நான்கினுங் கண்ணனுக்கே
ஆமதுகாம மறம்பொருள் வீடிதற் கென்றுரைத்தான்
வாமனன் சீலன் * இராமாநுச னிந்தமண்மிசையே.

(அனைவர்க்கும்) க்ஷேம ரூபமான சிறந்த மோக்ஷம் அர்த்தமும் தர்மமும் மிகவுஞ் சிறந்த காமமும்-ஆக இப்படி சொல்லப்பட்டுள்ள இவை நான்கு புருஷார்த்தங்கள் என்று (வைதிகர்) கூறுவர்கள் இந்த நான்கு புருஷார்த்தங்களுள் காமமாவது எம்பெருமான் விஷயத்திலேயே உண்டாமது ; தர்ம அர்த்த மோக்ஷங்கள் மூன்றும் இந்தக் காம புருஷார்த்தத்திற்கு சேஷபூதங்கள் என்று வாமநாவதாரம் செய்த பெருமானேடு ஒத்த சீலத்தை யுடையரான எம்பெருமானுர் இவ்வுலகத்தில் அருளிச்செய்தார்.

41. மண்மிசை யோனிகள் தோறும் பிறந்து * எங்கள் மாதவனே
கண்ணுறநிற்கிலும் காணகில்லா * உலகோர்க ளெல்லாம்
அண்ண லிராமாநுசன் வந்துதோன்றிய வப்பொழுதே
நண்ணரு ஞானந் தலைக்கொண்டு * நாரணற்காயினரே.

நமக்கு நாதனுன திருமால்தானே இப்பூமியிலுள்ள (மநுஷ்யாதி) யோனிகள் தோறும் அவதரித்து, எல்லாருடைய கண்ணுக்கும் தன்னை இலக்காக்கிக் கொண்டு நின்ற விடத்திலும் (அவனை நம்முடைய நாதனென்று;) காணமாட்டாதிருந்த இவ்வுலகத்தாரெல்லாரும் ஸர்வஸ்வாமியான எம்பெருமானுர் இங்கே வந்தவதரித்தவுடனே பெறுதற்கரிதான ஞானம் அதிகரிக்கப்பெற்று ஸ்ரீ மந்நாராயணனுக்கு சேஷப்பட்டனர்.

42. ஆயிழையார் கொங்கை தங்கும் * அக்காதலளற்றழுந்தி
மாயுமென்னுவியைவந்தெடுத்தா னின்று * மாமலராள்
நாயக னெல்லாவுயிர்கட்கும் நாத னரங்கனென்னுந்
தூயவன் * தீதிலிராமாநுசன் தொல்லருள் சுரந்தே.

லக்ஷ்மீபதியான பெரியபெருமாள் ஸகல ஆத்துமாக்களுக்கும் சேஷி என்று உபதேசிப்பவரும் பரமபரிசுத்தரும் எவ்வகைக் குற்றமுமில்லாத வருமான எம்பெருமானுர்,—(என்னசெய்தாரென்றல்) அழகிய ஆபரணங்களணிந்த ஸ்ரீத்

களுடைய கொங்கைத்தடத்தில் தங்கும் ஆசையாகிற சேற்றிலே அழுந்தி நசித்துப் போகிற என் ஆத்மாவை இன்று நிர்ஹேதுக க்ருபை பண்ணிவந்து உத்தரித்தருளினர்.

43. சுரக்குந் திருவுமுணர்வும் * சொலப்புகில் வாயமுதம்
பரக்கு மிருவினை பற்றறவோடும் * படியிலுள்ளீர் !
உரைக்கின்றன னுமக்கியானறஞ்சீறு முறுகலியைத்
துரக்கும் பெருமை * இராமாநுசனென்று சொல்லுமினே.

இப்பூமியிலுள்ளவர்களே ! நான் உங்களுக்கு (ஒரு ஹிதம்) சொல்லுகிறேன் ; (என்னவென்ருல்) தர்மமார்க்கத்தில் சீற்ற முடைத்தாய் ப்ரபலமான கலியை ஓட்டிவிடும் எம்பெருமானுருடைய திருநாமத்தைச் சொல்லுங்கள் ; (அப்படி சொன்னல்) பக்திப் பெருஞ்செல்வமும் ஞானமும் மேன்மேலும் பெருகும் ; அந்தத் திருநாமத்தைச் சொல்லத் தொடங்கும் போதே வாக்கிலே அம்ருதரஸம் வியாபிக்கும் ; மஹாபாபங்கள் அடியோடே போய்விடும்.

44. சொல்லார் தமிழொரு மூன்றும் * சுருதிகள் நான்குமெல்லை
யில்லா வறநெறியாவுந் தெரிந்தவன் * எண்ணருஞ்சீர்
நல்லார்பரவு மிராமாநுசன் றிருநாமம் நம்பிக்
கல்லாரகலிடத்தோர் * எதுபேறென்று காமிப்பரே.

விசாலமான இப்பூமியிலுள்ளவர்கள், சொல்நிரம்பிய இயல் இசை நாடகம் என்கிற ஒப்பற்ற முத்தமிழையும் நான்கு வேதங்களையும் கணக்கில்லாத தரும சாஸ்த்ரங்களையும் மற்றும் எல்லாக்கலைகளையும் அறிந்தவராயும், எண்ணமுடியாத குணங்களையுடையவராயும் ஸத்துக்களால் துதிக்கப்படுபவராயு மிருக்கிற எம்பெருமானுருடைய திருநாமத்தை (என் வார்த்தையை) நம்பிக்கற்கின்ருர்களில்லை ; (ஸ்ரீராமநுஜ நாமஸங்கீர்த்தநமே புருஷார்த்தமென்று அறியாதவர்களாய்) நமக்குப் புருஷார்த்தம் ஏது? என்று கேட்டுக்கொண்டிருக்கிருர்கள் ஐயோ !

45. பேருென்றுமற்றில்லை நின்சரணன்றி * அப்பேறளித்தற்
காருென்றுமில்லை மற்றச்சரணன்றி * என்றிப்பொருளைத்
தேறுமவர்க்குமெனக்கு முனைத்தந்த செம்மை சொல்லால்
கூறும்பரமன்று * இராமாநுச ! மெய்ம்மை கூறிடிலே.

எம்பெருமானுரே ! தேவரீருடைய திருவடிகளைத் தவிர உபேயம் வேறென்றுமில்லை ; தேவரீர் திருவடிகளாகிற அந்த உபேயத்தைத் தருவதற்கு அத்திருவடிகள் தவிர வேறு உபாயம் ஒன்றுமில்லை ; என்கிற இவ்வுண்மைப் பொருளை தெளிவாகத் தெரிந்துகொண்டிருக்கிற மஹான்களுக்கும் (இந்தத் தெளிவு சிறிதுமில்லாத) எனக்கும் (வாசி பாராமல் ஸமமாகவே) தேவரீரைக் காட்டிக் கொடுத்த செம்மைக் குணமானது உண்மை சொல்லில் வாய்கொண்டு சொல்லத் தரமன்று [அநுபவித்து உருகுமித்தனை.]

46. கூறுஞ்சமயங்க ளாறுங்குலைய * குவலயத்தே
மாறன்பணித்த மறையுணர்ந்தோனை * மதியிலியேன்
தேறும்படியென் மனம்புகுந்தானைத் திசையனைத்தும்
ஏறுங்குணனை * இராமாநுசனை யிறைஞ்சினமே.

மனம்போனபடி சொல்லிக்கொண்டிருக்கிற ஆறு பாஹ்ய மதங்களும் தலை மடக்கும்படி இப்பூமண்டலத்திலே நம்மாழ்வார் அருளிச்செய்த தமிழ் வேதத்தை கற்று அறிந்தவராயும் ஜ்ஞாநஹீநனை நானும் தெளியும்படியாக என் ஹ்ருதயத்திலே வந்து புகுந்தவராயும் எல்லா திக்குகளிலும் பரவிய திருக்குணங்களை யுடையவராயுமிருக்கிற எம்பெருமானாரை வணங்கிறோம். ... ... *

47. இறைஞ்சப்படும் பரனீசனரங்கனென்று * இவ்வுலகத்
தறம்செப்புமண்ணலிராமாநுசன் * என்னருவினையின்
திறஞ்செற்றிரவும் பகலும்விடா தென்றன்சிந்தையுள்ளே
நிறைந்தொப்பறவிருந்தான் * எனக்காரும் நிகரில்லையே.

'எல்லாராலும் வணங்கத்தக்க பரதெய்வம் (எதுவென்றால்) ஈசனாகிய ஸ்ரீ ரங்கநாதனேயாம்' என்று இப்பூமண்டலத்திலே ஸாக்ஷாத் தர்மத்தை அருளிச் செய்யுமவராய் ஸர்வஸ்வாமியான எம்பெருமானார் என்னுடைய போக்கமுடியாத கர்மஸமூகத்தைப் போக்கி ஸர்வ காலத்திலும் என் ஹ்ருதயத்தினுள்ளே பரிபூர்ணராகி (இவ்விருப்புக்கு ஒப்பில்லாதபடி எழுந்தருளியிருக்கிறார்; இப்படிப்பட்ட அருளைப் பெற்ற எனக்கு ஒப்பாவார் ஆருமில்லை.

48. நிகரின்றிநின்றவென் நீசதைக்கு * நின்னருளின்கணன்றிப்
புகலொன்றுமில்லை யருட்குமஃதேபுகல் * புன்மையிலோர்
பகரும்பெருமை யிராமாநுசவினி நாம்பழுதே
அகலும் பொருளென் * பயனிருவோமுக்கு மானபின்னே.

மஹான்கள் பேசவேண்டும்படியான பெருமையையுடைய எம்பெருமானாரே! என்னுடைய ஒப்பற்ற தாழ்மைக்கு தேவரீருடைய க்ருபையினிடத்தில் தவிர வேறு எவ்விடத்திலும் ஒதுங்க இடமில்லை; தேவரீருடைய அந்த க்ருபைக்கும் (என்போல்வாருடைய) அந்தத் தாழ்மையே சரணம்; (ஆக இவ்வகையாலே) அடியேனால் தேவரீருக்குப் பயன், தேவரீரால் அடியேனுக்குப் பயன் என்று ஸித்தமானபின்பு இனிமேலும் வியர்த்தமாக பிரிந்திருக்கைக்குக் காரணம் என்ன? *

49. ஆனதுசெம்மையறநெறி * பொய்ம்மையறுசமயம்
போனதுபொன்றி இறந்ததுவெங்கலி * பூங்கமலத்
தேனதிபாய்வயல் தென்னரங்கன்கழல் சென்னிவைத்துத்
தானதில்மன்னும் * இராமாநுச னித்தலத்துதித்தே.

தாமரைப் பூக்களிலுண்டான மகரந்தமானது ஆறுகப் பெருகப்பெற்ற கழனிகளையுடைய ஸ்ரீரங்கத்திலே எழுந்தருளி யிருக்கிற பெரிய பெருமாளுடைய திருவடிகளை சிரஸாவஹித்துக்கொண்டு தாம் அத்திருவடிகளிலேயே ப்ரவணராயிருக்கிற எம்பெருமானார் இப் பூமியிலே திருவவதரித்ததனால் ருஜுவான தர்ம மார்க்கமானது ஸத்தை பெற்றது; பொய்யே நிறைந்து கிடக்கின்ற அறுசமயங்களும் நாசமடைந்தன; கொடிய கலியுகமும் மாண்டது. ... ... *

50. உதிப்பனவுத்தமர் சிந்தையுள் * ஒன்னலர் நெஞ்சமஞ்சிக்
கொதித்திட மாறிநடப்பன * கொள்ளைவன்குற்றமெல்லாம்
பதித்தவென் புன்கவிப் பாவினம்பூண்டன பாவுதொல்சீர்
எதித்தலைநாதன் * இராமாநுசன்றன் னிணையடியே.

உலகமெங்கும் பரவின நித்ய கல்யாண குணங்களையுடையவரும் யதிகளுக்குத் தலையான நாயகருமான எம்பெருமானாருடைய திருவடியிணைகள் (எப்படிப்பட்டவை யென்றால்) உத்தமாதிகாரிகளுடைய திருவுள்ளங்களிலே ப்ரகாசிப்பவை; ப்ரதிபக்ஷிகளுடைய நெஞ்சானது பயப்பட்டுப் பரிதபிக்கும்படி மாறிமாறியிட்டு நடக்குந் தன்மையுடையன; அபாரமான வலிய தோஷங்கள் யாவும் அழுந்திக் கிடக்கிற என்னுடைய க்ஷுத்ரமான கவனமாகிய பாசுரங்களை ஸ்தோத்ரமாகப் பெற்றுக்கொண்டவை. ... ... *

51. அடியைத்தொடர்ந்தெழு மைவர்கட்காய் * அன்றுபாரதப்போர்
முடியப்பரிநெடுந் தேர்விடுங்கோனை * முழுதுணர்ந்த
அடியர்க்கமுத மிராமாநுசனென்னை யாளவந்திப்
படியிற்பிறந்தது * மற்றில்லைகாரணம் பார்த்திடிலே.

முற்காலத்தில் திருவடிகளை அவலம்பித்து செருக்கிக் கிளர்ந்த பஞ்சபாண்டவர்களுக்காக [பக்ஷபாதம் பூண்டு] பாரத யுத்தத்திலே (துரியோதநாதிகள்) மாளும்படியாக குதிரைபூண்ட பெரிய தேரை நடத்தின ஸர்வேச்வரனை (ஸ்வரூப ஸ்வபாவங்களில் ஒன்றுங் குறையாதபடி) பூர்த்தியாகத் தெரிந்துகொண்ட பாகவதர்களுக்கு பரமபோக்யரான எம்பெருமானார் இப் பூமண்டலத்தில் வந்து அவதரித்தது (எதற்காகவெனில்) அடியேனை ஆட்கொள்ளுகைக்காகவேயாம்; ஆராய்ந்து பார்க்குமளவில் இது தவிர வேறொரு காரணமுமில்லை. ... ... *

52. பார்த்தானறுசமயங்கள்பதைப்ப * இப்பார்முழுதும்
போர்த்தான்புகழ்கொண்டு புன்மையினே னிடைத்தான்புகுந்து *
தீர்த்தானிருவினை தீர்த்தரங்கன்செய்ய தாளிணையோ
டார்த்தான் * இவையெம்மிராமாநுசன்செய்யு மற்புதமே.

(எம்பெருமானாரானவர்) (வேதபாஹ்யங்களான) ஆறுதர்சநங்களும் துடிக்கும்படியாக திருக்கண் செலுத்தினார்; இப்பூமண்டலம் முழுவதையும் (தமது) கீர்த்தியினாலே மூடிவிட்டார்; நீசனான அடியேன் பக்கலிலே தாமாகவே (நிர்ஹேதுக க்ருபையினால்) வந்து புகுந்து பெரிய பாவங்களை போக்கியருளினார்; பாவங்களை போக்கினதுமன்றியில் ஸ்ரீரங்கநாதனுடைய அழகிய திருவடிகளோடே (என்னை) அந்வயிப்பித்தார்; ஆகிய இக்காரியங்களெல்லாம் எமக்கு ஸ்வாமியான எம்பெருமானார் செய்தருளின ஆச்சரியச் செயல்களாம். ... ... *

53 அற்புதன்செம்மை யிராமாநுசன் * என்னையாளவந்த
கற்பகங்கற்றவர் காமுறுசீலன் * கருதரிய
பற்பல்லுயிர்களும் பல்லுலகியாவும் பரனதென்னும்
நற்பொருள்தன்னை * இந்நானிலத்தேவந்து நாட்டினனே.

என்னை ஆட்கொள்வதற்காக அவதரித்த உதாரரும் ஞானிகள் ஆசைப்படும் படியான சீலகுணத்தை யுடையவரும் ஆச்சரிய சேஷ்டிதங்களை யுடையவரும் ருஜுவாயிருக்குந் தன்மை பொருந்தியவருமான எம்பெருமானார்.- நினைக்கவும் முடியாதபடி எண்ணிறந்திருக்கிற ஆத்ம வர்க்கங்களும் (அவ்வாத்மாக்களுக்கு இருப்பிடமான) அளவிறந்த எல்லா வுலகங்களும் எம்பெருமானுடைய ஸொத்துக்களாம்—என்கிற ஸாரார்த்தத்தை இவ்வுலகத்திலே வந்தவதரித்து ஸ்தாபித்தருளினார். ... ... *

54. நாட்டிய நீசச் சமயங்கள் மாண்டன * நாரணனைக்
காட்டியவேதம் களிப்புற்றது * தென்குருகைவள்ளல்
வாட்டமிலா வண்டமிழ்மறைவாழ்ந்தது மண்ணுலகில்
ஈட்டியசீலத்து * இராமாநுசன் தன்னியல்வுகண்டே.

இப்பூலோகத்தில் மேன்மேலும் திரட்டிக்கொண்ட சீல குணத்தையுடைய ரான எம்பெருமானாருடைய ஸ்வபாவத்தை பார்த்து, (துஷ்ட யுக்திகளாலே) நிலை நிறுத்தப்பட்டிருந்த க்ஷுத்ர மதங்களெல்லாம் ஒழிந்தன; ஸ்ரீமந்நாராயணனைப் பிரதிபாதித்த வேதங்களானவை (நமக்கு இனி ஒரு குறையுமில்லையென்று) செருக் கடைந்தன; அழகிய திருக்குருகூரில் அவதரித்த உதாரரான ஆழ்வார் (அருளிச் செய்த) ஒரு குறையுமற்ற சிறந்த தமிழ் வேதமான திருவாய்மொழி வாழ்வு பெற்றது. ... ... *

55. கண்டவர் சிந்தைகவரும் கடிபொழில் தென்னரங்கன் *
தொண்டர்குலாவு மிராமாநுசனை * தொகையிறந்த
பண்டருவேதங்கள் பார்மேல்நிலவிடப் பார்த்தருளும்
கொண்டலை மேவித்தொழும் * குடியாமெங்கள் கோக்குலமே.

கணக்கில்லாத ஸ்வரப்ரதாநங்களான வேதங்கள் இப்பூமியிலே ஓங்கி வளரும்படி செய்தருளினவரும் பரம உதாரரும், கண்டவர்களின் நெஞ்சைக் கவர் கின்ற மணமிக்க சோலைகள் சூழ்ந்த தென்னரங்கத்திற்குத் தலைவரான பெரிய பெருமாளுக்கு அடிமைப்பட்ட ஸ்ரீவைஷ்ணவர்களால் கொண்டாடப்படுபவருமான எம்பெருமானாரை பொருந்தி ஆச்ரயிக்கிற குலம் எங்களுக்கு ஸ்வாமியாகக் கூடிய குலமாம். ... ... *

56. கோக்குலமன்னரை மூவெழுகால் * ஒருகூர்மழுவால்
போக்கியதேவனைப் போற்றும் புனிதன் * புவனமெங்கு
மாக்கிய கீர்த்தி யிராமாநுசனை யடைந்தபின், என்
வாக்குரையாது * என்மனம் நினையாதினி மற்றொன்றையே.

க்ஷத்ரியகுலத்து அரசர்களை இருபத்தொரு தலைமுறையளவும் கூர்மை பொருந்திய ஒரு மழுவாலே (பரசுராமாவதாரத்தில்) தொலைத்தருளின எம்பெரு மானை துதிக்கின்ற பரம பரிசுத்தரும், உலகமெங்கும் பரவின புகழை யுடையவரு மான எம்பெருமானாரை ஆச்ரயித்த பின்பு மேலுள்ள காலமெல்லாம் வேறு எந்த விஷயத்தையும் எனது வாக்கானது சொல்லமாட்டாது; எனது மனமும் நினைக்க மாட்டாது. ... ... *

57. மற்றொருபேறு மதியாது * அரங்கன் மலரடிக்கா
ளுற்றவரேதனக் குற்றவராக் கொள்ளுமுத்தமனை *
நற்றவர்போற்று மிராமாநுசனை இந்நானிலத்தே
பெற்றனன் * பெற்றபின் மற்றறியேனொரு பேதைமையே.

ப்ரயோஜநாந்தரங்களை கணிசியாமல் அழகிய மணவாளனுடைய திருவடித் தாமரைகளுக்கு அடிமைப்பட்டவர்களையே தமக்கு ஆத்மபந்துக்களாக திருவுள்ளம் பற்றுகிற உத்தமபுருஷராயும் ப்ரபந்நர்களாலே புகழப்பட்டவராயுமிருக்கிற

எம்பெருமானுரை இந்த லோகத்திலே அடியேன் ஆச்ரயிக்கப்பெற்றேன்; ஆச்ரயித்த பின்பு (வேறு விஷயங்களை விரும்புகை முதலிய) எவ்வித அஜ்ஞாந கார்யமும் அறியமாட்டேன். ... ... *

58. பேதையர்வேதப் பொருளிதென்றுன்னி * பிரமநன்றென்
ரேதிமற்றெல்லா வுயிருமஃதென்று * உயிர்கள்மெய்விட்
டாதிப்பரனே டொன்ருமென்று சொல்லுமவ் வல்லலெல்லாம்
வாதில்வென்ருன் * எம்மிராமாநுசன் மெய்ம்மதிக்கடலே.

(வேதத்தைப் பிரமாணமாகக் கொள்ளாத) அவிவேகிகள் 'நாங்கள் சொல்லுகிற இதுதான் வேதத்தின் அர்த்தம்' என்று நிரூபித்துக்கொண்டு 'பரப்ரஹ்மமானது எல்லாவற்றினும் விலக்ஷணம்' என்று சொல்லி 'அந்த ப்ரஹ்மந்தவிர மற்ற எல்லா ஜீவராசிகளும் அந்த ப்ரஹ்மமே என்று சொல்லி 'ஜீவாத்மாக்கள் தேஹத்தை விட்டபின்பு ஸர்வகாரண பூதனுன பரமபுருஷனேடே ஐக்கியத்தையடைகின்றன' என்று சொல்லுகிற அந்த கோலாஹலங்களையெல்லாம் தத்வஜ்ஞாநக்கடலாகிய ஸ்வாமி எம்பெருமானுர் வாதத்தில் நிரஸித்து வெற்றி பெற்ருர். ... ... *

59. கடலளவாய திசையெட்டினுள்ளும் * கலியிருளே
மிடைதரு காலத்திராமாநுசன் * மிக்கநான்மறையின்
சுடரொளியால் அவ்விருளைத்துரந்திலனேல் * உயிரை
யுடையவன் நாரணனென்றறிவாரில்லை யுற்றுணர்ந்தே

நான்கு ஸமுத்ரங்களை எல்லையாகவுடைய எல்லாவிடங்களிலும் கலிபுருஷனுகிற அந்தகாரமே நெருங்கிக் கிடந்த காலத்தில் எம்பெருமானுர் திருவவதரித்து நான்கு வேதங்களின் அளவற்ற தேஜஸ்ஸைக் கொண்டு அந்த கலிதோஷத்தைப் போக்கியிராமற் போனுல் 'எல்லா ஆத்மாக்களுக்கும் சேஷி ஸ்ரீமந்நாராயணனே' என்று யாரும் தெரிந்து கொண்டிருக்கமாட்டார்கள். ... ... *

60. உணர்ந்தமெய்ஞ்ஞானியர் யோகந்தொறும் * திருவாய்மொழியின்
மணந்தருமின்னிசை மன்னுமிடந்தோறும் * மாமலராள்
புணர்ந்தபொன்மார்பன் பொருந்தும்பதிதொறும் புக்குநிற்கும்
குணந்திகழ்கொண்டல் * இராமாநுசனெங் குலக்கொழுந்தே.

ஆத்மகுணங்களால் விளங்குபவரும் (ஔதார்யத்தில்) காளமேகத்தை ஒத்தவரும் எங்கள் குலத்துக்குத் தலைவருமான எம்பெருமானுர் (எங்கே எழுந்தருளி யிருப்பரென்ருல்) கற்றுணர்ந்த தத்வஞானிகளுடைய கோஷ்டிகளெங்கும், திருவாய்மொழியினுடைய பரிமளம் மிக்க இனிய இசையுள்ள இடங்களெங்கும் பிராட்டி நித்யவாஸம் பண்ணுகிற அழகிய மார்பையுடைய திருமால் எழுந்தருளியிருக்கிற திவ்ய தேசங்களெங்கும் எழுந்தருளியிருப்பர். ... ... *

61. கொழுந்துவிட்டோடிப் படரும்வெங்கோள்வினையால் * நிரயத்
தழுந்தியிட்டேனை வந்தாட்கொண்டபின்னும் * அருமுனிவர்
தொழுந்தவத்தோ னெம்மிராமாநுசன் தொல்புகழ் சுடர்மிக்
கெழுந்தது * அத்தால் நல்லதிசயங்கண்ட திருநிலமே.

அருமையான நிஷ்டையையுடைய மஹான்களாலே ஸேவிக்கப் பெற்றவராயும் ப்ரபத்தியாகிற தபஸ்ஸையுடையவராயுமிருக்கிற ஸ்வாமி எம்பெருமானாருடைய நித்யமான கல்யாண குணங்கள் —, மேன்மேலும் அதிகமாகப் பெருகுகின்ற க்ரூரமாய் ப்ரபலமான துஷ்கர்மத்தாலே ஸம்ஸாரமாகிற நரகத்திலே அழுந்திக்கிடந்த என்னை வந்து ஆட்படுத்திக்கொண்ட பின்பும் ஒளி குன்றுதே முன்னினும் விசேஷமாக விளங்கா நின்றன ; அதைக்கண்டு விசாலமான இப்பூமண்டலம் மிக்க ஆச்சரியங் கொண்டது. ... ... *

62. இருந்தேனிருவினைப் பாசங்கழற்றி * இன்றுயானிறையும்
வருந்தேனினியெம் மிராமாநுசன் * மன்னுமாமலர்த்தாள்
பொருந்தாநிலையுடைப் புன்மையினோர்க்கொன்றும் நன்மைசெய்யாப்
பெருந்தேவரைப்பரவும் * பெரியோர்தம் கழல்பிடித்தே.

ஸ்வாமி எம்பெருமானாருடைய சிறந்த திருவடித்தாமரைகளில் சேராத ஸ்வபாவத்தை யுடையவர்களான நீசர்களுக்கு ஒருவிதமான உபகாரமும் செய்யாத பெரிய பெருமாளை போற்றுகின்ற ஆழ்வானாகிற மஹானுடைய திருவடிகளை இன்று ஆச்ரயித்தேனான பின்பு புண்ணியம் பாவமென்று இரண்டு வகையான கரும பாசங்களினின்று விடுபட்டவனானேன் ; இப்படி நிர்மலனாகப் பெற்ற அடியேன் இனிமேல் கொஞ்சங்கூட வருத்தப்படமாட்டேன். ... ... *

63. பிடியைத்தொடருங் களிறென்ன * யானுன்பிறங்கியசீர்
அடியைத் தொடரும்படி நல்கவேண்டும் * அறுசமயச்
செடியைத்தொடரும் மருள்செறிந்தோர் சிதைந்தோடவந்திப்
படியைத்தொடரும் * இராமாநுச மிக்கபண்டிதனே.

பாஹ்யமான ஆறு மதங்களாகிற தூறுகளிலே படிவதற்குக் காரணமான அவிவேகம் நிறைந்த மூடர்கள் பங்கமடைந்து வெருவி ஓடும்படியாக இப்பூமியிலே வந்து அவதரித்து (நம்போல்வரை விஷயீகரிப்பதற்குப்) பின் தொடர்கின்ற மஹாபண்டிதரான எம்பெருமானாரே! யானைப் பேடையைப் பின்பற்றித் திரிகின்ற ஆண் யானைபோல அடியேன் ஸௌந்தரியம் முதலிய குணங்கள் விளங்குகின்ற தேவரீரது திருவடிகளைப் பின்பற்றும்படி கிருபை செய்தருளவேணும். *

64. பண்டருமாறன் பசுந்தமிழ் * ஆனந்தம் பாய்மதமாய்
விண்டிடவெங்க ளிராமாநுசமுனிவேழம் * மெய்ம்மை
கொண்டநல்வேதக் கொழுந்தண்டமேந்திக் குவலயத்தே
மண்டிவந்தேன்றது * வாதியர்காளுங்கள் வாழ்வற்றதே.

எங்களுக்கு விதேயமான ஸ்ரீராமாநுஜ முனியாகிற மத்தகஜமானது நம்மாழ்வார் இசைகளாலே அருளிச்செய்த செந்தமிழான திருவாய்மொழியில் விளைந்த ஸந்தோஷம் பெருகுமதநீராக ஒழுகப்பெற்று ஸத்யவாதியான நல்ல வேதமாகிற பெரிய தடியைத் தூக்கிக்கொண்டு இப்பூமண்டலத்திலே உங்களை நெருக்கிக்கொண்டு வந்து மேலிடா நின்றது ; துர்வாதிகளே! உங்களுடைய பிழைப்பு போயிற்று. ... ... *

65. வாழ்வற்றது தொல்லைவாதியர்க்கு * என்றும் மறையவர்தம்
தாழ்வற்றது தவம் தாரணிபெற்றது * தத்துவநூல்
கூழற்றது குற்றமெல்லாம்பதித்த குணத்தினர்க்கந்
நாழற்றது * நம்மிராமாநுசன் தந்தஞானத்திலே.

ஸ்வாமி எம்பெருமானார்! அருளின ஞானத்தினால் நெடுநாளாக இருந்த துர்வாதிகளுக்கு வாழ்ச்சி அற்றுப் போயிற்று; வைதிகர்களுடைய குறை இனி ஒரு நாளும் இல்லாதபடியாயிற்று. பூமண்டலமானது பாக்கியம் பெற்றது; தத்வ பரமான சாஸ்திரங்கள் ஸந்தேஹமற நிச்சயமான பொருளைத் தெரிவிப்பவை யாயின. பல்வகைக் குற்றங்களும் நிறைந்த ஸ்வபாவத்தையுடைய ஜனங்களுக்கு அந்தக் குற்றங்கள் தீர்ந்தன, ... *

66. ஞானம்கனிந்த நலங்கொண்டு * நாடொறும் நைபவர்க்கு
வானங்கொடுப்பதுமாதவன் * வல்வினையேன்மனத்தில்
ஈனங்கடிந்த விராமாநுசன் தன்னையெய்தினர்க்கு அத்
தானங்கொடுப்பது * தன்தகவென்னும் சரண்கொடுத்தே.

திருமால் மோக்ஷம் அளிப்பது (எப்படிப்பட்டவர்களுக்கென்றால்) ஞானம் பக்திரூபமாகப் பரிபக்வமாகி அந்த பக்தியினால் நித்தியம் உருகுகிறவர்களுக்கே யாம்; மஹாபாபியான எனது ஹ்ருதயத்திலிருந்த கல்மஷங்களைப் போக்கடித்த எம்பெருமானார் தம்மைப் பற்றினவர்களுக்கு அந்த மோக்ஷ ஸ்தானத்தை அளிப்பது (எவ்விதமாக வென்றால்) தம்முடைய க்ருபையாகிற ஸ்தானத்தை (அவர்களுக்குக் கைம்முதலாகக்) கொடுத்து, [தமது திவ்ய க்ருபையாலே.] ... *

67. சரணமடைந்த தருமனுக்கா * பண்டுநூற்றுவரை
மரணமடைவித்தமாயவன் * தன்னை வணங்கவைத்த
கரணமிவையுமக்கன்றென் றிராமாநுச னுயிர்கட்கு
அரணங்கமைத்திலனேல் * அரணார்மற்றிவ்வாருயிர்க்கே.

தன்னைச் சரணம் பற்றின தர்ம புத்ரருக்காக முற்காலத்திலே துரியோதனன் முதலிய நூறு பேர்களை சாகும்படி செய்த எம்பெருமான் தன்னை வழிபடுவதற்காகவே ஏற்படுத்திவைத்த இந்திரியங்களாம் இவை; உங்களுக்கு உரிமைப் பட்டவையல்ல; இவ்வாறாக உபதேசித்து எம்பெருமானார் ஆத்மாக்களுக்கு ரக்ஷையைக் கற்பித்திலராகில் இந்த அருமையான ஆத்மாக்களுக்கு வேறு ரக்ஷகராவார் ஆர்? (ஆருமில்லை.) ... ... *

68. ஆரெனக்கின்று நிகர்சொல்லில் * மாயனன்றைவர் தெய்வத்
தேரினில்செப்பிய கீதையின்செம்மை * பொருள்தெரியப்
பாரினில்சொன்ன விராமாநுசனைப் பணியும்நல்லோர்
சீரினில்சென்றுபணிந்தது * என்னாவியும் சிந்தையுமே.

ஆச்சர்ய சேஷ்டிதங்களையுடைய எம்பெருமான் முற்காலத்தில் பஞ்ச பாண்டவர்களுடைய தெய்வத்தன்மை பொருந்திய தேரின்மீது (இருந்துகொண்டு) அருளிச்செய்த பகவத்கீதையினுடைய ஸ்வரஸமான அர்த்தத்தை (அனைவரும் எளிதாகக்) தெரிந்து கொள்ளும்படி இப்பூமியிலே (கீதா பாஷ்ய முகத்தாலே) அருளிச்செய்த எம்பெருமானாரை ஆச்ரயித்திருக்கிற விலக்ஷண புருஷர்களுடைய கல்யாண குணங்களிலே எனது ஆத்மாவும் மநஸ்ஸும் சென்று சேர்ந்து விட்டன; சொல்லுமளவில் இக்காலத்தில் எனக்கு ஆர் ஒப்பாவார்? ... ... *

69. சிந்தையினோடு கரணங்கள்யாவும் சிதைந்து * முன்னாள்
அந்தமுற்றாழ்ந்ததுகண்டு * இவையென்றனக் கன்றருளால்
தந்தவரங்கனும் தன்சரண்தந்திலன் தானதுதந்து *
எந்தையிராமாநுசன் வந்தெடுத்தனனின்றென்னையே.

ஸ்ருஷ்டிக்கு முற்காலத்தில் சிந்தையும் இந்திரியங்களுமெல்லாம் அழிந்து உபஸம்ஹாரத்தை யடைந்து அசேதந ப்ராயமாயிருப்பதைப் பார்த்து (அப்படி அசேதந ப்ராயராய்க் கிடந்தவர்களில் ஒருவனான) எனக்கு அந்த கரணகளேபரங்களை அக்காலத்தில் க்ருபையாலே உண்டாக்கின எம்பெருமானும் தனது திருவடிகளைக் காட்டிக் கொடுத்து உஜ்ஜீவிப்பிக்கவில்லை. (அக்குறை நீங்க) ஸ்வாமி எம்பெருமானார் தாமாகவே வந்து அந்தத் திருவடிகளைத் தந்தருளி இன்று என்னை ஸம்ஸாரத்தில் நின்றும் உத்தரிப்பித்தார். ... ... *

70. என்னையும் பார்த்தென்னியல்வையும்பார்த்து * எண்ணில்பல்குணத்த
உன்னையும்பார்க்கில் அருள்செய்வதேநலம் * அன்றியென்பால்
பின்னையும்பார்க்கில் நலமுளதேயுன் பெருங்கருணை
தன்னையென்பார்ப்பர் * இராமாநுசா உன்னைச் சார்ந்தவரே.

எம்பெருமானாரே! (ஒரு குணமுமில்லாமல் குற்றமே நிறைந்திருக்கிற) என்னையும் நோக்கி (இனிமேலும் எவ்வித நன்மையும் ஸம்பாதித்துக் கொள்ள முடியாமலிருக்கிற) என்னுடைய தன்மையையும் நோக்கி எண்ணிறந்த பல திருக்குணங்களையுடைய தேவரீரையும் நோக்குமளவில் (இப்போதுபோல எப்போதும்) அருள் செய்திருப்பதே நல்லது; இதுவொழிய மேலும் ஆராயுமளவில். என்னிடத்தில் ஏதாவது நன்மையுண்டோ? (சிறிதும் இல்லை) (நன்மையொன்றுமில்லாவிடில் நம் அருள் செய்யலாகாதென்று திருவுள்ளம் பற்றினால்) தேவரீரை ஆச்ரயித்தவர்கள் தேவரீருடைய கிருபையைப்பற்றி என்ன நினைப்பர்கள் (இளப்பமாக நினைப்பார்களோ.) ... ... *

71. சார்ந்ததென்சிந்தை யுன்தாளிணைக்கீழ் * அன்புதான்மிகவும்
கூர்ந்ததத் தாமரைத்தாள்களுக்கு * உன்தன் குணங்களுக்கே
தீர்ந்ததென்செய்கை முன்செய்வினைநீ செய்வினையதனால்
பேர்ந்தது * வண்மை யிராமாநுசா! எம்பெருந்தகையே.

ஔதார்யமுடையரும் எமக்கு ஸ்வாமியும் பெருந்தன்மையுடையருமான எம்பெருமானாரே! எனது நெஞ்சு தேவரீருடைய உபயபாதங்களின் கீழ் அமர்ந்துவிட்டது; பக்தியும் அந்தத் திருவடித் தாமரைகள் விஷயத்திலேயே மிகவும் அதிகரித்தது எனது செயலும் தேவரீருடைய திருக்குணங்களுக்கே அற்றுத் தீர்ந்தது. முன்னே செய்த பாவங்களெல்லாம் தேவரீர் செய்தருளின (கடாக்ஷமாகிற) காரியத்திலே தொலைந்து போயின. ... ... *

72. கைத்தனன்தீய சமயக்கலகரை * காசினிக்கே
உய்த்தனன்தூய மறைநெறிதன்னை * என்றுன்னியுள்ளம்
நெய்த்தவன்போ டிருந்தேத்தும் நிறைபுகழோருடனே
வைத்தனனென்னை * இராமாநுசன்மிக்க வண்மைசெய்தே.

எம்பெருமானார் தமது ஔதார்ய குணத்தை அதிகமாகக் காட்டி, துஷ்ட மதங்களிலிருந்துகொண்டு கலஹஞ்செய்கிறவர்களை ஒழித்துவிட்டார்; பரிசுத்தமான வேதமார்க்கத்தை பூமியிலே ஸ்தாபித்தருளினார்; என்று அநுஸந்தித்து நெஞ்சு கனிந்து அந்த ப்ரீதியோடே கூடியிருந்து (அவரை) ஸ்தோத்ரம் பண்ணுகிற புகழ் நிறைந்த மஹான்களோடே (என்னையும் ஒருவனாக எண்ணும்படி) என்னை வைத்தருளினார். ... ... *

73. வண்மையினாலும் தன்மாதகவாலும் * மதிபுரையும்
தண்மையினாலு மித்தாரணியோர்கட்கு * தான்சரணாய்
உண்மைநன்ஞான முரைத்தவிராமா நுசனையுன்னும்
திண்மையல்லாலெனக்கில்லை * மற்றோர் நிலை தேர்ந்திடிலே.

தம்முடைய ஔதார்ய குணத்தாலும் பரமக்ருபையாலும் சந்த்ரனை யொத்த திருவுளக் குளிர்ச்சியாலும் இப்பூமியிலுள்ளவர்களுக்கு தாமே ரக்ஷகராய்க் கொண்டு யதார்த்தமாய் விலக்ஷணமான ஞானத்தை உபதேசிக்கிற எம்பெருமானாரை சிந்திப்பதாகிற அத்யவஸாயமொன்று தவிர ஆராயுமளவில் அடியேனுக்கு வேறொரு அத்யவஸாயமில்லை. ... ... *

74. தேரார்மறையின் திறமென்று * மாயவன் தீயவரைக்
கூராழிகொண்டு குறைப்பது * கொண்டலனையவண்மை
ஏரார்குணத்தெம் மிராமாநுசனவ்வெழில்மறையில்
சேராதவரைச் சிதைப்பது * அப்போதொரு சிந்தைசெய்தே.

(இப்பாவிகள்) வேதஞ் சொல்லுகிற வழியை நிரூபித்தறிகிறதில்லையென்று பாவிகளை எம்பெருமான் தண்டிப்பது கூர்மையான தனது திருவாழியாலே; மேகம் போன்ற ஔதார்ய குணமுடையவரும் (மற்றும்பல) நல்ல குணங்களுடையவருமான ஸ்வாமி எம்பெருமானார் அந்த சிறந்த வேதத்தில் அந்வயியாதவர்களை பங்கப்படுத்துவது (எப்படியென்றால்) அப்போதப்போது ஒவ்வொரு யுக்தியைக் கொண்டாம். ... ... *

75. செய்த்தலைச்சங்கம் செழுமுத்தமீனும் * திருவரங்கர்
கைத்தலத்தாழியும் சங்கமுமேந்தி * நங்கண்முகப்பே
மொய்த்தலைத்துன்னை விடேனென்றிருக்கிலும் நின்புகழே
மொய்த்தலைக்கும்வந்து * இராமாநுசாவென்னை முற்றுநின்றே.

வயல்களில் சங்குகளானவை அழகிய முத்துக்களை உண்டாக்குமிடமான திருவரங்கமாநகரில் எழுந்தருளியிருக்கும் பெருமாள் தமது திருக்கையிலே திருவாழி திருச்சங்குகளைத் தரித்துக்கொண்டு நமது கண்ணெதிரில் வந்து நெருங்கி புத்தியைக் கெடுத்து 'உன்னை விடமாட்டேன், என்று இருந்தாலும் எம்பெருமானாரே! தேவரீருடைய திவ்ய குணங்களே என் பக்கல் வந்து சூழ்ந்துகொண்டு ஆகர்ஷிக்கின்றன. ... ... *

76. நின்றவண் கீர்த்தியும் நீள்புனலும் * நிறைவேங்கடப்பொற்
குன்றமும் வைகுந்தநாடும் குலவிய பாற்கடலும் *
உன்றனக் கெத்தனை யின்பந்தரு முன்னிணைமலர்த்தாள்
என்றனக்குமது * இராமாநுசா இவை யீந்தருளே.

எம்பெருமானாரே! நிலைநின்ற பெரும் புகழும் அதிகமான நீர்ப்பெருக்கும் நிறைந்துள்ள திருவேங்கடமென்னும் அழகிய திருமலையும் ஸ்ரீவைகுண்டமாகிய திருநாடும் கொண்டாடத்தக்க திருப்பாற்கடலும் தேவரீருக்கு எவ்வளவு ஆனந்தத்தை விளைக்குமோ தேவரீருடைய உபய பாதாரவிந்தங்கள் எனக்கும் அவ்வளவு ஆநந்தத்தை யுண்டாக்கும்; இப்படிப்பட்ட திருவடிகளை அடியேனுக்குத் தந்தருளவேணும். ... ... *

77\. ஈந்தனனீயாதவின்னருள் * எண்ணில்மறைக்குறும்பைப்
பாய்ந்தனனம்மறைப்பல்பொருளால் * இப்படியனைத்தும்
ஏய்ந்தனன் கீர்த்தியினு லென்வினைகளை வேர்பறியக்
காய்ந்தனன் * வண்மை யிராமாநுசற்கென் கருத்தினியே.

(இதற்கு முன்பு ஒருவர்க்கும்) அருளாத விலக்ஷணமான க்ருபையை அடியேனுக்குச் செய்தருளினவரும் எண்ணிறந்த வேத விரோதி மதங்களை அந்த வேதங்களின் அர்த்தங்களையே கொண்டு கண்டித்தவரும், தமது கீர்த்தியாலே இப்பூமியெங்கும் வியாபித்தவரும் எனது கருமங்களை வேரோடே அறும்படி போக்கினவரும் ஔதார்யமே வடிவுகொண்டவருமான எம்பெருமானுருக்கு இன்னமும் (செய்யத்தக்கதாகத்) திருவுள்ளத்தில் ஏதேனுமுண்டோ? ... *

78\. கருத்தில்புகுந்துள்ளில்கள்ளங்கழற்றி * கருதரிய
வருத்தத்தினல் மிகவஞ்சித்து * நீயிந்தமண்ணகத்தே
திருத்தித்திருமகள் கேள்வனுக்காக்கியபின் என்னெஞ்சில்
பொருத்தப்படாது * எம்மிராமாநுச! மற்றோர் பொய்ப்பொருளே.

எம்பெருமானுரே! தேவரீர் நெஞ்சால் நினைக்க முடியாத பரிச்ரமங்கள் பட்டு என்னை நன்ருக ஏமாற்றி (எனது) நெஞ்சிலே வந்து புகுந்து உள்ளேயிருந்த ஆத்மாபஹார தோஷத்தைப் போக்கி சிக்ஷித்து இந்த லோகத்திலே திருமாலுக்கு ஆளாம்படி பண்ணின பின்பு (இதற்கு மாருன) வேறு எந்த தப்பு விஷயமும் என் மனத்தில் பொருந்தமாட்டாது. ... ... *

79\. பொய்யைச்சுரக்கும் பொருளைத்துரந்து * இந்தப்பூதலத்தே
மெய்யைப்புரக்குமிராமாநுசன்நிற்க * வேறுநம்மை
உய்யக்கொள்ள வல்லதெய்வமிங்கியாதென் றுலர்ந்துஅவமே
ஐயப்படா நிற்பர் * வையத்துள்ளோர் நல்லறிவிழந்தே.

இப்பூமியிலே பொய்யான விஷயத்தையே மேன்மேலும் வெளிப்படுத்துகிற (புறமதத்தவர்களின்) அர்த்தங்களைக் கண்டித்து ஸத்யத்தை ரக்ஷிக்கிற எம்பெருமானுர் எழுந்தருளியிருக்கும்போது (இவரைக்கணிசியாமல்) இப்பூமியிலுள்ளவர்கள் 'நன்மை உஜ்ஜீவிக்கச் செய்யக்கூடிய வேறு ஏதாவது தேவதை இவ்வுலகில் உண்டோ?' என்று (விசாரித்துக்கொண்டு) மன வருத்தத்தாலே உடம்பு உலர்ந்து (எம்பெருமானுர் திருவடிகளே சரணம் என்றிருக்கையாகிற) நல்ல ஞானம் பெருமல் வீணுக ஸம்சயப்படா நின்ருர்கள். ஐயோ! ... *

80\. நல்லார்பரவு மிராமாநுசன் * திருநாமம் நம்ப
வல்லார்திறத்தை மறவாதவர்கள் யவர் * அவர்க்கே
எல்லாவிடத்திலு மென்றுமெப் போதிலுமெத்தொழும்பும் *
சொல்லால்மனத்தால் கருமத்தினல் செய்வன் சோர்வின்றியே.

ஸத்துக்களாலே கொண்டாடப்படுகிற எம்பெருமானுருடைய திருநாமத்தை (தங்களுக்குத் தஞ்சமாக நம்பியிருக்க வல்லவர்களுடைய படிகளை மறவாமல் எப்போதும் சிந்திப்பவர்கள் யாரோ; அப்படிப்பட்ட ஸ்ரீராமாநுஜ பக்த பக்தர்களுக்கே ஸகல தேசங்களிலும் ஸகல அவஸ்தைகளிலும் ஸகல காலங்களிலும் ஸகலவித கைங்கரியங்களையும் மனமொழி மெய்களென்னும் த்ரிகரணங்களாலும் பிரியாதே யிருந்து செய்வேன். ... ... *

81. சோர்வின்றியுன்றன் துணையடிக்கீழ் * தொண்டுபட்டவர்பால்
சார்வின்றிநின்ற வெனக்கு * அரங்கன்செய்ய தாளிணைகள்
பேர்வின்றியின்று பெறுத்து மிராமாநுச வினியுன்
சீரொன்றிய கருணைக்கு * இல்லைமாறு தெரிவுறினே.

தேவரீருடைய உபயபாதங்களின் கீழே சோராமல் அடிமைப்பட்டவர்கள் விஷயத்தில் பொருத்தமில்லாமலிருந்த எனக்கு இன்றைத்தினத்தில் பெரிய பெருமாளுடைய சிவந்த திருவடியிணைகளை ஒருகாலும் விட்டு நீங்காதபடி சிரோ பூஷணமாகத் தந்தருளின எம்பெருமானாரே ! இப்படியான பின்பு ஆராயுமளவில் சிறந்த திருவருளுக்கு ஒப்பு இல்லை. ... ... *

82. தெரிவுற்றஞானம் செறியப்பெறுது * வெந் தீவினையால்
உருவற்றஞானத் துழல்கின்ற வென்னை * ஒருபொழுதில்
பொருவற்ற கேள்வியனுக்கி நின்றுனென்ன புண்ணியனே
தெரிவுற்றகீர்த்தி * இராமாநுசனென்னும் சீர்முகிலே.

தெளிவான ஞானத்தைச் சேரப்பெருமல் மிகவுங் கொடிதான கருமத்தாலே உபயோகமற்ற ஞானத்தை யுடையனாய் (ஒன்றிலும் நிலையில்லாமல்) திரிகிற என்னை ஒரு க்ஷணகாலத்தில் ஒப்பற்ற பஹுச்ருதனாக ஆக்கியருளின வருமப்ரஸித்தமான புகழையுடையவரும் (ஔதார்யத்தில்) சிறந்த மேகமென்னத் தக்கவருமான எம்பெருமானார் என்ன தார்மிகரோ ? [ஒப்பற்ற தர்மிஷ்டரென்றபடி]

83. சீர்கொண்டு பேரறம்செய்து * நல்வீடு செறிதுமென்னும்
பார்கொண்ட மேன்மையர் கூட்டனல்லேன் * உன்பதாயுகமாம்
ஏர்கொண்ட வீட்டை யெளிதினிலெய்துவ னுன்னுடைய
கார்கொண்ட வண்மை * இராமாநுசா ! இது கண்டுகொள்ளே.

எம்பெருமானாரே ! சமம் தமம் முதலிய குணங்களை யுடையராய் சிறந்த தருமமாகிய சரணுகதி யோகத்தை யநுஷ்டித்து பரமபுருஷார்த்தமான மோக்ஷத்தை அடைந்திடுவோம் என்றிருக்கிற ப்ரஸித்தமான ப்ரபாவத்தையுடைய ப்ரபந்நர்களுடைய கோஷ்டியில் நான் சேர்ந்தவனல்லேன் ; தேவரீருடைய உபய பாதங்களாகிற பரம விலக்ஷணமான மோக்ஷத்தை ஸுலபமாக அடைந்திடுவேன் ; (ஔதார்யத்தில்) மேகத்தை வென்றிருக்கிற தேவரீருடைய ஔதார்யம் இப்படிப்பட்டது ; தேவரீரே இதனைக் கண்டு கொள்ளலாம். [அடியேன் சொல்லவேணுமோ ?] ... ... *

84. கண்டுகொண்டே னெம்மிராமா நுசன்றன்னைக் காண்டலுமே *
தொண்டுகொண்டே னவன் தொண்டர்பொற்ருளில் *என் தொல்லை வெந்நோய்
விண்டுகொண்டேனவன் சீர்வெள்ளவாரியை வாய்மடுத் தின்று
உண்டுகொண்டேன் * இன்னமுற்றனவோதி லுலப்பில்லையே.

ஸ்வாமி எம்பெருமானாரை இன்று (உள்ளபடி) தெரிந்து கொண்டேன் ; இப்படி தெரிந்து கொண்டவளவிலே அவரது பக்தர்களுடைய அழகிய திருவடிகளில் அடிமைப்பட்டேன் ; (அதனுல்) எனது பழைய காடுவினைகளை நீக்கிக் கொண்டேன். அவருடைய கல்யாண குண ப்ரவாஹமாகிற கடலை வாயார அநுபவிக்கப் பெற்றேன் ; இப்படியாக இன்னமும் நான் பெற்ற நன்மைகளை சொல்லத்தொடங்கினுல் (அதுக்கு) ஒரு முடிவு கிடையாது. ... ... *

85. ஓதியவேதத்தி னுட்பொருளாய் * அதனுச்சி மிக்க
சோதியைநாத னெனவறியா துழல்கின்ற தொண்டர் *
பேதைமைதீர்த்த விராமானுசனைத் தொழும் பெரியோர்
பாதமல்லாலென்றன் னாருயிர்க்கு * யாதொன்றும் பற்றில்லையே.

அந்த வேதங்களின் முடிவாகிய உபநிஷத்துக்களிலே மிகவும் விளங்குபவனாயுமுள்ள ஸ்ரீமந்நாராயணனை ஸர்வ சேஷியென்று தெரிந்து கொள்ளாமல் கண்டவிடங்களிலும் அடிமை செய்து திரிகின்ற பாமரர்களுடைய அவிவேகத்தை போக்கடித்த எம்பெருமானாரை ஸேவிக்கின்ற மஹான்களுடைய திருவடிகள் தவிர எனது அருமையான ஆத்மாவுக்கு வேறு ஏதேனும் புகலிடமில்லை. ... *

86. பற்றா மனிசரைப்பற்றி * அப்பற்று விடாதவரே
உற்றாரென வுழன்றோடி நையேனினி * ஒள்ளியநூல்
கற்றார்பரவு மிராமானுசனைக் கருது முள்ளம்
பெற்றார்யவர் * அவரெம்மை நின்றாளும் பெரியவரே.

உபயோகமற்ற மநுஷ்யர்களைப்பற்றி அந்தப்பற்றுதலைவிடாமல் அவர்களையே உறவினராகக்கொண்டு அவர்கள் பின்னே அலைந்து அவர்களிட்ட காரியங்களைச் செய்ய ஓடி இனிமேல் துவளமாட்டேன்; சிறந்த சாஸ்த்ரங்களைக் கற்றவர்களாலே கொண்டாடப்படுகிற எம்பெருமானாரை அநுஸந்திக்கும்படியான நெஞ்சையுடையோர் யாவரோ, அந்த மஹான்களே நம்மை சாச்வதமாக அடிமை கொள்ளும் மஹாத்மாக்கள். ... ... *

87. பெரியவர்பேசிலும் பேதையர் பேசிலும் * தன்குணங்கட்கு
உரியசொல்லென்று முடையவனென்றென்று * உணர்வில் மிக்கோர்
தெரியும்வண்கீர்த்தி யிராமானுசன் மறை தேர்ந்துலகில்
புரியுநன்ஞானம் * பொருந்தாதவரைப் பொரும் கலியே.

ஞானசக்திகளால் நிறைந்த மஹான்கள் பேசினாலும் ஒன்றுந் தெரியாதவர்கள் பேசினாலும் தனது திருக்குணங்களுக்கு ஏற்ற சொற்களை எப்போதும் உடையவரென்று பலகாலுஞ் சொல்லி சிறந்த ஞானிகள் அநுஸந்திக்கிற திவ்ய கீர்த்தியையுடையரான எம்பெருமானார் வேதங்களை ஆராய்ந்து இவ்வுலகத்தில் உபதேசித்தருளின நல்ல ஞானத்தில் சேராதவர்களை கலிபுருஷன் பீடிப்பன். ... *

88. கலிமிக்க செந்நெல் கழனிக்குறையல் * கலைப்பெருமான்
ஒலிமிக்க பாடலையுண்டு தன்னுள்ளம் தடித்து * அதனால்
வலிமிக்கசீய மிராமானுசன் மறைவாதியராம்
புலிமிக்கதென்று * இப்புவனத்தில் வந்தமை போற்றுவனே.

நிலவளம் மிகுந்த செந்நெல்கழனிகளையுடைய திருக்குறையலூரில் அவதரித்த சாஸ்த்ர மென்னும்படியான திவ்யப்ரபந்தங்களை யருளிச் செய்த பெருமை வாய்ந்த திருமங்கையாழ்வாருடைய அதிசயித்த இசையையுடைய பெரிய திருமொழியை அநுபவித்து தமது திருவுள்ளம் பூரித்து அத்தால் மிடுக்கு அதிகரித்த சிங்கம் போன்ற எம்பெருமானார், வேதத்தில் துர்வாதங்கள் பண்ணுகிற குத்ருஷ்டிகளாகிற புலிகள் அதிகமாய்விட்டனவென்று (அவற்றைத் தண்டிப்பதற்காக இவ்வுலகில் அவதரித்த படியை) புகழ்ந்திடக்கடவேன். ... *

89. போற்றரும் சீலத்திராமாநுச * நின்புகழ் தெரிந்து
சாற்றுவனேல் அதுதாழ்வதுதீரில் * உன்சீர் தனக்கோர்
ஏற்றமென்றே கொண்டிருக்கிலுமென் மனமேத்தி யன்றி
ஆற்றகில்லாது * இதற்கென்னினைவா யென்றிட் டஞ்சுவனே.

புகழ்ந்து தலைக்கட்ட முடியாத சீல குணத்தையுடைய எம்பெருமானாரே; தேவரீருடைய திருக்குணங்களை உணர்ந்து பேசுவேனாகில் (நீசனாகிய நான் பேசுகிறவது) (தேவரீருக்கு) அவத்யமாம்; அப்படி நான் பேசுவது தவிர்ந்தால் தேவரீருடைய திருக்குணங்களுக்கு மேன்மையாகும் என்று நான் தெரிந்து கொண்டிருந்தாலும் எனது நெஞ்சானது (தேவரீருடைய திருக்குணங்களைப்) புகழ்ந்தல்லது தரித்திருக்கமாட்டாது; இவ்விஷயத்திலே தேவரீர் என்ன நினைக்குமோ வென்று பயப்படுகின்றேன். ... ... *

90. நினையார் பிறவியை நீக்கும்பிரானை * இந்நீணிலத்தே
எனையாள வந்த விராமாநுசனை * இருங்கவிகள்
புனையார்புனையும் பெரியவர் தாள்களில் பூந்தொடையல்
வனையார் * பிறப்பில் வருந்துவர்மாந்தர் மருள்சுரந்தே.

ஸம்ஸாரத்தை யொழிக்கும் உபகாரகராயும் இப்பெரிய பூமியிலே என்னை அடிமை கொள்வதற்கே அவதரித்தவராயுமுள்ள எம்பெருமானாரை சிந்தியாதவர்களாயும் (அவர் விஷயமாக) நல்ல பாடல்களைப் பாடாதவர்களாயும் ஏதோ பாக்கியத்தாலே) பாடல்களைப் பாடுகிற மஹான்களின் திருவடிகளில் புஷ்ப மாலைகளை ஸமர்ப்பியாதவர்களாயுமுள்ள மனிசர்கள் அஜ்ஞானம் அதிகமாகப் பெற்று ஸம்ஸாரத்திற் கிடந்து துன்பப்படுவர்கள். ... ... *

91. மருள் சுரந்தாகம வாதியர்கூறும் * அவப்பொருளாம்
இருள் சுரந்தெய்த்த வுலகிருள்நீங்க * தன்னீண்டியசீர்
அருள் சுரந்தெல்லா வுயிர்கட்கும்நாத னரங்கனென்னும்
பொருள் சுரந்தான் * எம் மிராமாநுசன் மிக்கபுண்ணியனே.

(சிவன் சொன்ன) சைவ ஆகமத்தைப் பிரமாணமாகக்கொண்டு வாதம் பண்ணுகிற பாசுபதர்கள் அஜ்ஞானம் அதிகரிக்கப்பெற்று (சிவனுடைய பரத்துவ விஷயமாகச்) சொல்லுகிற நீசமான அர்த்தங்களாகிற இருள் மேலிட்டு (அதனால்) கெட்டுப்போன உலகத்தவர்களுடைய அஜ்ஞாநாந்தகாரமானது போகும்படியாக தம்முடைய விலக்ஷணமான க்ருபையைப் பெருக்கி 'எல்லாப் பிராணிகளுக்கும் ஸ்வாமி ஸ்ரீரங்கநாதனே' என்கிற அர்த்தத்தை வெளியிட்டவரான ஸ்வாமி எம்பெருமானார் சிறந்த புண்யாத்மா. ... ... *

92. புண்ணியநோன்பு புரிந்துமிலேன் * அடிபோற்றி செய்யும்
நுண்ணருங்கேள்வி நுவன்றுமிலேன் * செம்மைநூற் புலவர்க்கு
எண்ணருங்கீர்த்தி யிராமாநுச இன்று நீபுகுந்தென்
கண்ணுள்ளும் நெஞ்சுள்ளும் * நின்றவிக்காரணம் கட்டுரையே.

நல்ல சாஸ்த்ரங்களைக் கற்றுக் கவி சொல்ல வல்லவர்களுக்கும் அளவிட முடியாத கீர்த்தியையுடைய எம்பெருமானாரே! புண்ணியமான ஒரு விரதத்தையும் அடியேன் அநுஷ்டிக்கவில்லை; தேவரீருடைய திருவடிகளை வாழ்த்துகைக்கு உறுப்பான ஸூக்ஷ்மமாய் அருமையான ச்ரவணத்தை (செய்யவேணுமென்று

வாயாலே) சொல்லவுமில்லை (இப்படியிருக்க;) இன்று அடியேனது கண்ணினுள்ளேயும் நெஞ்சினுள்ளேயும் புகுந்து எழுந்தருளி யிருப்பதற்குக் காரண மருளிச் செய்யவேணும். ... ... *

93 கட்டப்பொருளை மறைப்பொருளென்று * கயவர் சொல்லும்
பெட்டைக்கெடுக்கும் பிரானல்லனே * என்பெருவினையைக்
கிட்டிக்கிழங்கொடு தன்னருளென்னு மொள்வா ளுருவி
வெட்டிக்களைந்த * இராமாநுச னென்னும் மெய்த்தவனே.

அடியேன் பக்கல் வந்து நெருங்கி தம்முடைய கிருபையாகிற அழகிய வாளை உறையில் நின்றுங் கழற்றி (அதனால்) எனது மஹா பாபங்களை வேரோடே அறுத்தொழித்த எம்பெருமானாரென்கிற மாமுனிவர் (எப்படிப்பட்டவரென்னில்) துஷ்டர்களான குத்ருஷ்டிகள் தப்பான அர்த்தங்களை வேதங்களின் அர்த்தமாகக் கொண்டு சொல்லுகிற பிரட்டுப் பேச்சுகளை கண்டித்தொழித்த மஹாநுபாவரன்றோ.

94. தவந்தருஞ் செல்வும் தகவுந்தரும் * சரியாப்பிறவிப்
பவந்தருந் தீவினை பாற்றித்தரும் * பரந்தாமமென்னும்
திவந்தரும் தீதில் ராமாநுசன்தன்னைச் சார்ந்தவர்கட்கு
உவந்தருந்தேன் * அவன்சீரன்றி யானென்று முன்மகிழ்ந்தே.

எவ்வகை குற்றமும் அற்றவரான எம்பெருமானார் தம்மை வந்து அடைந்தவர்களுக்கு சரணாகதி நிஷ்டையைக் கொடுத்தருள்வர்; பக்தியாகிற செல்வத்தையும் தமது அருளையும் கொடுத்தருள்வர்; நிவர்த்திக்க முடியாத ஜந்ம ஸம்ஸாரங்களை உண்டாக்குகின்ற கொடுவினைகளை போக்கடித்தருள்வர்; பரமபதமென்று சொல்லப்படுகிற வானுலகத்தை அளிப்பர்; (ஆனபின்பு) அடியேன் அவ்வெம்பெருமானாருடைய திருக்குணங்களைத் தவிர்த்து வேறொன்றையும் மனக்காதலோடே விரும்பி அநுபவிக்கமாட்டேன். ... ... *

95. உண்ணின் றுயிர்களுக் குற்றனவேசெய்து * அவர்க்குயவே
பண்ணும் பரனும் பரிவிலனாம்படி * பல்லுயிர்க்கும்
விண்ணின் தலைநின்று வீடளிப்பானெம் மிராமாநுசன்
மண்ணின் தலத்துதித்து * உய்மறைநாலும் வளர்த்தனனே.

எல்லா ஆத்மாக்களுக்கும் அந்தர்யாமியா யிருந்துகொண்டு ஹிதமானவற்றையே நடத்திக்கொண்டு அவ்வாத்மாக்களுக்கு உஜ்ஜீவநத்தையே பண்ணிக்கொண்டிருக்கிற எம்பெருமானும் (ஆத்மாக்களிடத்தில் எம்பெருமானாரைப் போல்) ப்ரீதி யுடையவனல்லன் என்ன வேண்டும்படியாக ஸகல ஆத்மாக்களுக்கும் மோக்ஷத்தை அருள்வதற்காக ஸ்வாமி எம்பெருமானார் ஸ்ரீவைகுண்டத்தில் நின்றும் இப் பூதலத்திலே அவதரித்து எல்லார்க்கும் உஜ்ஜீவந ஹேதுவான நான்கு வேதங்களையும் குறைவின்றி வளரச் செய்தருளினார். ... *

96. வளரும்பிணிகொண்ட வல்வினையால் * மிக்க நல்வினையில்
கிளருந்துணிவு கிடைத்தறியாது * முடைத் தலையூன்
தளருமளவும் தரித்தும் விழுந்தும் தனிதிரிவேற்கு
உளரெம்மிறைவர் * இராமாநுசன் றன்னை யுற்றவரே.

அளவற்ற துன்பங்களை யுண்டாக்கவல்ல கொடிய கருமங்களாலே பரம தர்மமான சரணாகதியில் மஹா விச்வாஸம் கிடைக்காததனால் கெட்ட நாற்றங்களுக்கு இருப்பிடமான சரீரம் கட்டுக்குலையும் வரையில் ஒருவாறு தரித்திருந்தும் (சப்தாதி விஷயங்களிலே) போய் விழுந்தும் துணையின்றித் திரிகிற எனக்கு ஸ்வாமிகள் (யாரென்றால்) நம் எம்பெருமானாரை ஆச்ரயித்த மஹான்கள் இருக்கிறார்கள். ... ... *

97. தன்னையுற்றாட்செய்யும் தன்மையினோர் * மன்னு தாமரைத்தாள்
தன்னையுற்றாட்செய்ய வென்னையுய்த்தா னின்று * தன்தகவால்
தன்னையுற்றாரன்றித் தன்மையுற்றா ரில்லை யென்றறிந்து
தன்னையுற்றாரை * இராமாநுசன் குணம் சாற்றிடுமே.

எம்பெருமானாரானவர், தம்மைப்பற்றி யிருப்பாருண்டேயொழிய தம்மைப் பற்றி யிருப்பவர்களுடைய குண கீர்த்தனம் பண்ணும் ஸ்வபக்த பக்தர்கள் ஒருவருமில்லை யென்று திருவுள்ளம்பற்றி அடியேனை இன்றையதினத்தில் தமது அருளாலே (என்ன செய்தாரென்றால்) தம்மையடைந்து கைங்கரியம் பண்ணும் ஸ்வபாவமுடையவரான ஸ்வபக்தர்களுடைய ஒன்றோடொன்று சேர்ந்த திருவடித் தாமரைகளை நான் அடைந்து ஆட்செய்யும்படி வைத்தருளினார். ... ... *

98. இடுமேயினிய சுவர்க்கத்தில் * இன்னம் நரகவிட்டுச்
சுடுமேயவற்றைத் தொடர்தரு தொல்லை * சுழல்பிறப்பில்
நடுமேயினிநம் மிராமாநுசன் நம்மை நம்வசத்தே
விடுமேசரண மென்றால் * மனமேநையல் மேவுதற்கே.

நம் எம்பெருமானார். உமது திருவடிகளே சரணமென்று நாம் சொல்லி விட்டோமானால் (சிலர்க்கு) இனிதாகத் தோற்றுகிற ஸ்வர்க்கத்திலே நம்மைக் கொண்டு சேர்த்திடுவரோ? அல்லது நரகத்திலே கொண்டு தள்ளி தஹிக்கச் செய்வரோ? அந்த ஸ்வர்க்க நரகங்களைத் தொடர்ந்து கிடக்கிற அநாதியாயும் சுழன்று வருவதாயுமுள்ள ஜன்மத்திலே நிறுத்துவரோ மேலுள்ள காலங்களில் நம்மை நாம் போகிற வழியே விட்டு வைப்பரோ? (இவை செய்யமாட்டாரான பின்பு) ஓ நெஞ்சே! பேறு பெறும் விஷயமாக நீ கரையவேண்டா. ... *

99. தற்கச் சமணரும் சாக்கியப்பேய்களும் * தாழ்சடையோன்
சொற்கற்ற சோம்பரும் சூனியவாதரும் * நான்மறையும்
நிற்கக் குறும்புசெய் நீசரும்மாண்டனர் நீணிலத்தே.
பொற்கற்பகம் * எம்மிராமாநுச முனி போந்தபின்னே.

தர்க்கம் பண்ணுகிற சமணர்களும் பேய்ப்போலே பிடித்தபிடி விடாதே நிற்கிற பௌத்தர்களும் ருத்ரனுடைய சொல்லாகிய சைவாகமத்தைக் கற்ற தாமஸர்களான சைவர்களும் சூந்யவாதிகளும் நான்கு வேதங்களும் விளங்கிக் கொண்டிருக்கச் செய்தே (அவற்றுக்குச் சேராத) அபார்த்தங்களைப் பண்ணுகிற குத்ருஷ்டிகளும் ஒழிந்தார்கள்; (எப்போது? என்றால்) சிறந்த கல்ப வ்ருக்ஷம் போலே உதாரரான ஸ்வாமி எம்பெருமானார் விசாலமான இப்பூமியிலே திருவவதரித்த பின்பு. ... ... *

100. போந்ததென்னெஞ்சென்னும்பொன்வண்டு * உனதடிப்போதிலொண்சீ
ராந்தெளிதேனுண் டமர்ந்திட வேண்டி * நின்பாலதுவே
ஈந்திடவேண்டு மிராமாநுச இதுவன்றி யொன்றும்
மாந்தகில்லாது * இனி மற்றொன்றுகாட்டி மயக்கிடலே.

எம்பெருமானாரே! எனது நெஞ்சாகிற அழகிய வண்டானது தேவரீருடைய திருவடித் தாமரைகளில் அழகிய குணங்களாகிற தேனைப்பருகி நித்யவாஸம் பண்ண விரும்பி தேவரீரிடத்தில் வந்து சேர்ந்தது; அத்திருகுணங்களையே அளித்தருளவேணும்; இத்திருகுணங்களைத் தவிர வேறொன்றையும் (நெஞ்சு) புஜிக்கமாட்டாது; இப்படியான பின்பு வேறொரு விஷயத்தைக் காட்டி மயக்கவேண்டா. ... ... *

101. மயக்கு மிருவினை வல்லியிற்பூண்டு * மதிமயங்கித்
துயக்கும் பிறவியில் தோன்றியவென்னை * துயரகற்றி
உயக்கொண்டு நல்கு மிராமாநுசவென்ற துன்னை யுன்னி
நயக்குமவர்க் கிதிழுக்கென்பர் * நல்லவரென்று நைந்தே.

"அஜ்ஞானத்தை விளைக்கவல்ல புண்ய பாபமென்னும் இரு கருமங்களாகிற விலங்கில் அகப்பட்டுக்கொண்டு அறிவுகெட்டு ப்ரமிக்கச் செய்கிற ஸம்ஸாரத்திலே பிறந்த அடியேனை துக்கங்களைப் போக்கி உஜ்ஜீவிக்கச் செய்து அருள் செய்கின்ற எம்பெருமானாரே!" என்று தேவரீருடைய பாவநத்வத்தைப் பேசுகையாகிற இது தேவரீரை அநுஸந்தித்து உருகி எப்போதும் ஆசையுடனிருப்பவர்களுக்கு தகாதது என்று ஸத்துக்கள் சொல்லுவர்கள். ... *

102. நையும் மனமுன் குணங்களையுன்னி * என்னாவிருந்தெம்
ஐய னிராமாநுச னென்றழைக்கும் * அருவினையேன்
கையும் தொழும் கண்கருதிடுங்காணக் கடல்புடைசூழ்
வையமிதனில் * உன்வண்மை யென்பாலென் வளர்ந்ததுவே.

(எம்பெருமானாரே!) எனது நெஞ்சானது தேவரீருடைய திருக்குணங்களைச் சிந்தித்து கரைகின்றது; எனது வாக்கானது நிலைநின்று எமக்கு ஸ்வாமியான எம்பெருமானாரே! என்று அழைக்கின்றது மஹாபாபியான என்னுடைய கைகளும் அஞ்ஜலி பண்ணுகின்றன; கண்களானவை (தேவரீரை) ஸேவிக்க ஆசைப்படுகின்றன; சுற்றிலும் கடல் சூழப்பெற்ற இப்பூமண்டலத்தினுள்ளே தேவரீருடைய ஔதார்யகுணம் அடியேன்மீது (இவ்விதமாக) வளர்ந்ததற்குக் காரணம் யாதோ? ... ... *

103. வளர்ந்தவெங்கோப மடங்கலொன்றாய் * அன்று வாளவுணன்
கிளர்ந்தபொன்னாகம் கிழித்தவன் * கீர்த்திப் பயிரெழுந்து
விளைந்திடும்சிந்தை யிராமாநுச னென்றன் மெய்வினைநோய்
களைந்து நன்ஞானமளித்தனன் * கையில் கனியென்னவே.

முன்னொரு காலத்தில் கடூரமான கோபம் மேலிடப்பெற்ற ஒரு நரசிங்க மூர்த்தியாகி வாளையுடைய ஹிரண்யாஸுரனது செருக்கினால் நெறித்திருந்த பொன்போன்ற மார்வை கிழித்துப் பொகட்டவனான எம்பெருமானுடைய திருப்புகழ்களாகிற பயிர் வளர்ந்து விளையப்பெற்ற திருவுள்ளத்தை யுடையரான எம்பெருமானார் எனது உடலைப்பற்றி யிருக்கிற வினைநோய்களை யெல்லா மொழித்து கையிலங்கு நெல்லிக்கனிபோலே ஸுலபமாக விலக்ஷணமான ஞானத்தைக் தந்தருளினார் ... ... *

104. கையில்கனியென்னக் கண்ணனைக் காட்டித்தரிலும் * உன்தன்
மெய்யில்பிறங்கிய சீரன்றி வேண்டிலன் யான் * நிரயத்
தொய்யில்கிடக்கிலும் சோதிவிண் சேரிலும் இவ்வருள்நீ
செய்யில்தரிப்பன் * இராமாநுச என்செழுங் கொண்டலே.

(ஔதார்யத்தில்) விலக்ஷணமான மேகம்போன்ற எம்பெருமானாரே! (தேவரீர்) எம்பெருமானை உள்ளங்கை நெல்லிக்கனிபோலே காட்டிக் கொடுத்தாலும் (தேவரீருடைய திருமேனியில் விளங்குகிற ஸௌந்தரியம் முதலிய குணங்களைத் தவிர வேறொன்றிலும் நான் கண்வைக்கமாட்டேன்; ஸம்ஸார நரகக் குழியில் அழுந்திக் கிடந்தேனாகிலும் சோதிமயமான பரம பதத்தை அடைந்தேனாகிலும் (தேவரீருடைய திருமேனியழகை அநுபவித்திருக்கைக்கு உறுப்பான) கிருபையை தேவரீர் செய்தருளினால்தான் (ஸம்ஸாரத்திலோ மோக்ஷத்திலோ) கால்பாவி நிற்பேன். ... ... *

105. செழுந்திரைப் பாற்கடல் கண்டுயில்மாயன் * திருவடிக்கீழ்
விழுந்திருப்பார் நெஞ்சில் மேவுநன்ஞானி * நல்வேதியர்கள்
தொழுந்திருப் பாத னிராமாநுசனைத் தொழும்பெரியோர்
எழுந்திரைத் தாடுமிடம் * அடியேனுக் கிருப்பிடமே.

அழகிய அலைகளையுடைய திருப்பாற்கடலில் பள்ளி கொண்டிரா நின்ற ஸர்வேச்வரனுடைய திருவடிகளின் கீழே விழுந்து கிடக்கும் மஹான்களுடைய ஹ்ருதயத்திலே பொருந்தி யெழுந்தருளியிருக்கிற சிறந்த ஞானியாயும் நல்ல வைதிகர்களால் ஸேவிக்கப்பட்ட திருவடிகளை யுடையராயுமிருக்கிற எம்பெருமானாரை ஸேவிக்கின்ற மஹாத்மாக்கள் உடம்பு இருந்தவிடத்தில் இராமல் கிளர்ந்து கோஷித்துக்கொண்டு கூத்தாடும் இடம் அடியேன் வஸிக்குமிடமாகும். *

106. இருப்பிடம் வைகுந்தம் வேங்கடம் * மாலிருஞ்சோலையென்னும்
பொருப்பிடம் மாயனுக்கென்பர் நல்லோர் * அவைதன்னொடும் வந்
திருப்பிடம் மாய னிராமாநுசன் மனத்தின்றவன்வந்
திருப்பிடம் * என்ற னிதயத்தினுள்ளே தனக்கின்புறவே.

ஸர்வேச்வரனுக்கு வாஸஸ்தானம் (எவையென்றால்) பரமபதமும் திருவேங்கடமலையும் திருமாலிருஞ் சோலையென்கிற திருமலையும் (ஆகிய இவையாம்) என்று ஸத்துக்கள் சொல்லுவர்கள். (இவற்றை இருப்பிடமாகவுடைய) ஸர்வேச்வரன் அந்த ஸ்ரீவைகுண்டம் முதலியவற்றோடே கூட வந்து எழுந்தருளியிருப்பது எம்பெருமானாருடைய திருவுள்ளத்திலேயாம்; அவ்வெம்பெருமானார் தாம் இப்போது வந்து தமக்கு ஆநந்தமாக எழுந்தருளியிருப்பது அடியேனுடைய ஹ்ருதயத்தினுள்ளேயாம். ... ... *

107. இன்புற்றசீலத் திராமாநுசா * என்றுமெவ்விடத்தும்
என்புற்றநோ யுடல்தோறும் பிறந்திறந்து * எண்ணரிய
துன்புற்று வீயினும்சொல்லுவ தொன்றுண்டுன் தொண்டர்கட்கே
அன்புற்றிருக்கும்படி * என்னையாக்கியங் காட்படுத்தே.

ஆநந்த பூர்ணரா யெழுந்தருளி யிருக்கிற ஸௌசீல்ய குணமுடைய எம்பெருமானாரே! தேவரீரிடத்தில் அடியேன் விஜ்ஞாபிக்க வேண்டிய விஷயம் ஒன்றுண்டு; (அஃது என்னவென்றால்) எலும்பிலே உறைந்து நலியக்கூடிய வியாதிகளுக்கு இருப்பிடமான சரீரங்களிலெல்லாம் பிறப்பதும் இறப்பதுமாகி எண்ணமுடியாத துன்பங்களை யநுபவித்து முடிந்து போனாலும் எல்லாக் காலங்களிலும் எல்லாவிடங்களிலும் தேவரீருடைய பக்தர்கள் விஷயத்திலேயே பக்தனாயிருக்கும்படி அடியேனைச் செய்தருளி அந்த பக்தர்களிடத்தில் (அடியேனை) ஆட்படுத்தி யருளவேணும். (இதுவே அடியேனுடைய வேண்டுகோள்) ... *

108. அங்கயல் பாய்வயல் தென்னரங்கன் * அணியாகமன்னும்
பங்கய மாமலர்ப் பாவையைப்போற்றதும் * பத்தியெல்லாம்
தங்கிய தென்னத் தழைத்துநெஞ்சே நந்தலைமிசையே
பொங்கிய கீர்த்தி * இராமாநுசனடிப் பூமன்னவே.

ஓ மனமே! பக்தியெல்லாம் நம்மிடத்திலே குடிகொண்டதென்று சொல்லும்படியாக வீறுபெற்று. பரந்த புகழையுடையரான எம்பெருமானாருடைய திருவடித் தாமரைகள் நமது தலைமேலே நித்யவாஸம் பண்ணும்படியாக, நாம் செய்ய வேண்டிய காரியம் என்னவென்றால்) அழகிய கயல் மீன்கள் பாய்கிற கழனிகள் சூழ்ந்த தென்னரங்கத்தில் உறையும் எம்பெருமானுடைய அழகிய திருமார்பிலே நித்யவாஸம் பண்ணுகிறவளாய் சிறந்த தாமரைப் பூவில் பிறந்த பதுமை போன்றவளான ஸ்ரீமஹா லக்ஷ்மியை வாழ்த்துவோம். ... ... *